

# மக்கள் உரிமையும் அரசின் கடமையும்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
தமிழ்நாடு அரசு
2016

# மக்கள் உரிமையும் அரசின் கடமையும்

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**

தமிழ்நாடு அரசு

2016

# பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | ஊராட்சி நிர்வாகம் | 7 |
| 3. | மாநில நிதி ஆணைய மானியம் | 17 |
| 4. | மத்திய நிதி ஆணைய மானியம் | 20 |
| 5. | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி | 21 |
| 6. | தாய் திட்டம் (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்) | 25 |
| 7. | முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் | 32 |
| 8. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 37 |
| 9. | தன்னிறைவுத் திட்டம் | 45 |
| 10. | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 51 |
| 11. | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு | 53 |
| 12. | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 55 |
| 13. | தூய்மையான கிராம இயக்கம் | 57 |
| 14. | ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 58 |
| 15. | பள்ளிக் கழிப்பறைகளை பராமரித்தல் | 61 |
| 16. | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் | 63 |
| 17. | ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 64 |
| 18. | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 66 |
| 19. | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) | 77 |
| 20. | பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) | 79 |
| 21. | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 82 |
| 22. | நபார்டு – ஆர்.ஐ.டி. எப். திட்டம் | 85 |
| 23. | பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் | 86 |
| 24. | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டம் | 87 |

| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 25. | குறைதீர்க்கும் வழிமுறை | 89 |
| 26. | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 99 |
| 27. | தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் | 126 |
| 28. | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP) | 146 |

# மக்களின் உரிமையும் அரசின் கடமையும்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 4.05 கோடிபேர் (56%) ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர். இவ்வூரகப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, தரமான சாலை அமைத்தல் மற்றும் பராமரித்தல், துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட அடிப்படைப் பணிகள் போன்றவற்றை முனைப்புடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், பள்ளி கட்டிடங்கள் கட்டுதல், அவற்றில் குடிநீர் வசதி, கழிப்பறை போன்ற கட்டமைப்பு வசதிகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய முக்கிய பணிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் அமைத்தல் மற்றும் பராமரித்தல், பொதுக்கழிப்பிடம், தனிநபர் கழிப்பிடங்களை அமைத்தல் மற்றும் சுகாதாரத்தை பேணுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கிராமப்புற ஏழை எளிய மக்களின் வேலைவாய்ப்பினை உறுதிசெய்து அவர்கள் அரசு நிர்ணயித்த ஊதியத்தினை பெற்றிட வழிவகை செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் மூலம் கிராம மக்களின் வறுமை ஒழிப்பு, கிராமப்புற மகளிர் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்களை வலுப்படுத்துதல் போன்றவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயல்படுத்தி வருகின்றது.

## மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள்

73வது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திருத்தம், 1993–ல் கொண்டு வரப்பட்ட பிறகு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994ல் இயற்றப்பட்டது. இதன்படி, ஊரகப் பகுதிகளில் மூன்றடுக்கு ஊராட்சி முறை அதாவது, அடித்தள அமைப்பாக கிராம ஊராட்சி, இடைநிலையில் வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சிகள் மூலம் மத்திய, மாநில அரசுகளின் அனைத்து ஊரக வளர்ச்சித் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நோக்கம்

அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், ஊரக துப்புரவுப் பணிகள், சாலைகள், வடிகால் வசதிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை கிராம ஊராட்சியின் முக்கிய பொறுப்பாகும். அனைத்து தனிநபர் பயன்பெறும் திட்டங்களில் பயனாளிகள் கிராம ஊராட்சிகள் மூலமே கண்டறியப்பட்டு தேர்வு செய்யப்படுகின்றனர். இதற்கு கிராம சபை ஒப்புதல் அளிக்கிறது. இடைநிலை ஊராட்சியான வட்டார ஊராட்சி வலுவான நிர்வாக அமைப்பும், தொழில்நுட்ப பிரிவும் கொண்டுள்ளதால் ஊரக

வேலை வாய்ப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் கிராம ஊராட்சியுடன் இணைந்து பங்காற்றுகிறது. திட்ட ஒருங்கிணைப்பு, ஆய்வு மேற்கொள்ளுதல் ஆலோசனை வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பாக மாவட்ட ஊராட்சி திகழ்கிறது. மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகள் தங்களின் சட்டப்படியான விருப்பக் கடமைகள் மற்றும் ஆய்வு செய்யும் கடமைகளோடு ஒப்படைக்கப்பட்ட பிற பணிகளையும் செய்து வருகின்றன.

## நிர்வாக அமைப்பு

### மாநில அளவில்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகத்தை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் செயல்படுத்துகிறார். மத்திய, மாநில அரசுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயலாக்கத்தை முறைப்படுத்தி கண்காணித்தல் ஆகியவையவற்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். தொழில் நுட்பம் சார்ந்த பணிகளில் தலைமைப் பொறியாளர் அதிகாரம் கொண்ட ஒரு கண்காணிப்பு பொறியாளர் தலைமையில் செயல்படும் தொழில்நுட்ப பிரிவு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு உதவி புரிந்து வருகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், மகளிர் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங்களுக்குப் பொறுப்பாவார். கிராமப்புற ஏழை மக்களை ஆற்றல்படுத்துதல் மற்றும் வாழ்வாதாரத்திற்கான திட்டங்கள் திட்ட இயக்குநர், புது வாழ்வு திட்டம் தலைமையில் செயல்படுத்தப்பட்டுவருகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தவும் திட்ட இயக்குநர் தலைமையில் ஒரு அலகு செயல்பட்டு வருகிறது.

### மாவட்ட அளவில்

மாவட்ட ஆட்சித் தலைவர் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஆய்வாளராக செயல்படுகிறார். மாவட்டத்தில் திட்டப்பணிகளை மேற்கொள்ளும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு மாவட்ட ஆட்சியரே தலைவராவார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட இயக்குநர், திட்டப் பணிகளை நிறைவேற்ற மாவட்ட ஆட்சியருக்கு உதவிபுரிகிறார். ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும், நிர்வாக பொறியாளர் தலைமையில் ஒரு பொறியியல் பிரிவு இயங்கி வருகிறது. உதவி இயக்குநர் நிலையிலான ஒரு செயலாளர், மாவட்ட ஊராட்சியில் பணிபுரிகிறார். அத்துடன், இவர் பதவிவழி மாவட்ட திட்டக் குழுவின் செயலாளராகவும் உள்ளார். மேலும், நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) ஆகியோர் மாவட்ட ஆட்சியருக்கு ஊராட்சி நிர்வாகத்தில் உதவி புரிகின்றனர்.

## வட்டார அளவில்

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளனர். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆவார். வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் கிராம ஊராட்சிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார். ஒவ்வொரு வட்டார ஊராட்சியிலும் ஒன்றியப் பொறியாளர் / உதவிப் பொறியாளர், பணிமேற்பார்வையாளர் மற்றும் சாலை ஆய்வாளர் ஆகியோர் தொழில்நுட்பப் பணிகளை மேற்கொள்கின்றனர். இப்பொறியாளர்களின் செயல்பாடுகள் உட்கோட்ட அளவில் உள்ள ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர்களால் கண்காணிக்கப்படுகிறது.

## கிராம ஊராட்சி அளவில்

கிராம ஊராட்சித் தலைவரே கிராம ஊராட்சியின் செயல் அலுவலரும் ஆவார். தலைவர் மற்றும் துணைத்தலைவர் அல்லது ஊராட்சிகளின் ஆய்வாளரால் (மாவட்ட ஆட்சித் தலைவர்) நியமிக்கப்படும் கிராம ஊராட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கிராம ஊராட்சி கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்கான காசோலைகளில் ஒப்பம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிராம ஊராட்சித் தலைவருக்கு கிராம ஊராட்சி செயலாளர் நிர்வாகத்தில் உதவி புரிகிறார்.

# ஊராட்சி நிர்வாகம்

# 2. ஊராட்சி நிர்வாகம்

## கிராம ஊராட்சியின் கடமைகள்

மூன்றடுக்கு ஊராட்சிகளிலேயே, அடிப்படை வசதிகளை உருவாக்கி, அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்து செயல்படும் அமைப்பாக, கிராம ஊராட்சிதான் விளங்குகிறது. இந்த அமைப்பு, மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக செயல்படுகிறது.

## கட்டாயக் கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **110**ல் கீழ்க்கண்டவற்றை கிராம ஊராட்சிகளின் கட்டாயக் கடமைகளாக வகைப்படுத்தியுள்ளது.

- கிராம ஊராட்சி சாலைகளை அமைத்தல், அத்தகைய சாலைகளில் பாலங்கள் மற்றும் கல்வெட்டுகள் போன்றவற்றைக் கட்டுதல், தெருக்களை மேம்பாடு செய்தல் மற்றும் அவற்றை அவ்வப்போது பழுதுபார்த்துப் பராமரிப்பு செய்தல்.

- குடியிருப்புப் பகுதியில், பொதுச் சாலைகள், தெருக்கள், பொதுமக்கள் கூடுமிடங்கள் போன்ற பகுதிகளில் தெரு விளக்குகளை அமைத்துப் பராமரித்தல்.

- பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதுமான அளவு கிடைக்க வகை செய்தல். இதற்கென உரிய திட்டங்களை நேரடியாகவோ, ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ செயல்படுத்துதல், விசைப்பம்புகள், கைப்பம்புகள், பொதுக் குழாய்கள் போன்றவற்றை நிறுவுதல், வாய்ப்புள்ள இடங்களில் வீட்டு இணைப்பு வழங்குதல் மற்றும் அத்தகைய குடிநீர் திட்டங்களைப் பராமரித்தல்.

- கிராமப்புறங்களில் பொது சுகாதாரத்தை மேம்படுத்தப் பொது கழிப்பிடங்கள் கட்டுதல், பள்ளிகளில் சுகாதார வசதிகளை நிறுவுதல், வீடுகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மக்களுக்கு உதவி செய்தல், இதன் மூலம் கிராமப்புற சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுத்து தனிநபர் சுகாதார வசதியை மேம்படுத்துதல்.

- கிராமப்புறங்களில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், குறிப்பாக நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுத்தல், கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத்து குப்பைகளையும், கழிவுகளையும் தெருக்களில் இருந்து அகற்றுதல், மரங்களை நட்டு சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்.

- பொது மக்களின் சுகாதாரத்திற்கும், பாதுகாப்பிற்கும் இடையூறாக உள்ள புதர்கள், முட்செடிகள், பாழுங்கிணறுகள், சுகாதாரக் கேடான குளங்கள் மற்றும் குட்டைகளை அகற்றுதல்.
- இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகியவற்றை அமைத்துப் பராமரித்தல்.
- கிராம நத்தங்களை விரிவுபடுத்துதல் மற்றும் கட்டடங்களை ஒழுங்குபடுத்துதல்.
- கிராமப் பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் அரசால் ஒப்படைக்கப்படும் மத்திய, மாநில அரசின் பிற திட்டங்களை செயல்படுத்துதல்.
- அரசு அவ்வப்போது ஒப்படைக்கும் பிற கடமைகளை ஆற்றுதல்.

## விருப்பக் கடமைகள்

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111–ன் படி பின்வரும் கடமைகளை தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டு கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

- சாலைகளில் இருபுறமும் மரக் கன்றுகளை நட்டுப் பராமரித்தல்.
- குடியிருப்பு மற்றும் கட்டடங்கள் உள்ள பகுதிகளுக்கு அப்பால் உள்ள சாலைகளிலும் தெரு விளக்குகள் அமைத்துப் பராமரித்தல்.
- பொது சந்தைகள் அமைத்துப் பராமரித்தல்.
- உள்ளூர் திருவிழாக்களிலும், சந்தைகளிலும் சுகாதார வசதிகள் செய்தல்.
- வண்டி நிறுத்துமிடம், பேருந்து நிறுத்துமிடம், கால்நடைத் தொழுவங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்.
- இறைச்சிக் கூடங்கள் அமைத்தல்.
- பயணிகள் தங்குமிடங்களை அமைத்துப் பராமரித்தல்.
- படிப்பகங்கள் ஏற்படுத்திப் பராமரித்தல்.
- வானொலி, தொலைக்காட்சி அறைகள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் அமைத்தல்.
- உடற்பயிற்சி நிலையங்களை அமைத்துப் பராமரித்தல்.

- முறைசாராக் கல்வி, சமூகக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி நிலையங்கள் அமைத்து நடத்துதல்.

## கிராம ஊராட்சிக் குழுக்கள்

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்பட வேண்டும்.

- நியமனக்குழு
- வளர்ச்சிக்குழு
- வேளாண்மைக் குழு
- பணிகள் குழு
- கல்விக் குழு

## நியமனக் குழு

- கிராம ஊராட்சியில் ஊராட்சி நிதியில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை தேர்வு செய்வது இக்குழுவின் முக்கிய பணி ஆகும். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரும், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இடம் பெறுவர்.

## வளர்ச்சிக் குழு

- இக்குழுவின் தலைவராக கிராம ஊராட்சியில் உள்ள பெண் உறுப்பினர்களில் ஒருவர் இருப்பார். மேலும் இரண்டு உறுப்பினர்களும் இடம் பெறுவர்.

- மக்கள் நலம், சுகாதாரம், குடிநீர், சமுதாய சொத்துக்கள் ஆகியவற்றினை பராமரித்தல், தரம் உயர்த்துதல், தொற்று நோய் பரவாமல் தடுக்க விழிப்புணர்வு முகாம் அமைத்தல், தடுப்பூசி முகாம்கள் அமைத்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

## வேளாண்மைக் குழு

- இக்குழுவின் தலைவர், கிராம ஊராட்சியின் உறுப்பினர்களுள் ஒருவராவார். நீர்பாசன ஆதாரங்களில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாய குழுக்களை ஏற்படுத்துதல், வேளாண்மை, தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, பால் பண்ணை, தரிசு நில மேம்பாடு, வறட்சிப் பணி மேம்பாடு, சமூக காடுகள், நில

மேலாண்மை மற்றும் மண் அரிப்பு தடுப்பு போன்ற நடவடிக்கைகளில் கிராம ஊராட்சிக்கு உதவுதல் போன்ற முக்கிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

### பணிகள் குழு

- மத்திய, மாநில அரசுத் திட்டங்களை தரத்துடன் உரிய காலத்தில் நிறைவேற்றவும், கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள உள்ளூர் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்கவும், இக்குழு கிராம ஊராட்சிக்கு உதவியாக இருக்கும்.

### கல்விக் குழு

- கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் செயல்பாடுகளை கண்காணித்தல், பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மக்களின் பங்கேற்பினைப் பெறுதல், மக்களிடையே முதியோர் கல்வி, நூலகப் பராமரிப்பு, எழுத்தறிவு ஆகியவற்றை ஏற்படுத்தும் முகாம்களை அமைத்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

### கிராம சபை

1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 3ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், அக்கிராம ஊராட்சிப் பகுதியில் வாக்காளர்களாகப் பதிவு செய்த அனைத்து நபர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு கிராம சபை செயல்படும். கிராம சபை, ஜனநாயக அமைப்பின் அடித்தளமாகும். பொது மக்கள் நேரடியாக ஊராட்சி நிர்வாகத்தில் பங்கேற்பதால் அடித்தள ஜனநாயகத்திற்கு வலுவூட்டப்படுகிறது. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் திட்டமிடுவதிலும், வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவதிலும், பொதுமக்களின் ஒட்டுமொத்தத் திறமை மற்றும் அனுபவம் உதவி செய்கிறது. கிராம ஊராட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்தை கிராம சபைக் கூட்டத்தில் சமூகத் தணிக்கைக்கு உட்படுத்துவதன் மூலம் வெளிப்படையான நிர்வாகம் உறுதி செய்யப்படுகிறது.

- கிராம ஊராட்சிகள், ஒரு ஆண்டில் பின்வரும் நாட்களில், குறிப்பாக ஜனவரி 26, மே 1, ஆகஸ்ட் 15, மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டத்தினை நடத்த வேண்டும். தேவையின் அடிப்படையில், சிறப்பு கிராம சபைக் கூட்டங்களை ஊராட்சிகளின் ஆய்வாளர்(மாவட்ட ஆட்சித் தலைவர்) அனுமதி பெற்று நடத்தலாம்.

- தகுதி வாய்ந்த அனைத்து வாக்காளர்களும் கிராம சபையின் உறுப்பினர்களாவர்.

- விவாதிக்கப்பட வேண்டிய கூட்டப் பொருள்கள், கிராம ஊராட்சிகளால் முடிவு செய்யப்படும்.
- கிராம சபைக் கூட்டம் குறித்தான அறிவிப்பு குறைந்த பட்சம் ஒருவாரத்திற்கு முன்பாக வெளியிட வேண்டும்.
- கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்கு மக்கள் தொகை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு இருக்க வேண்டும்.

| மக்கட் தொகை | குறைவெண் வரம்பு |
| --- | --- |
| 500 வரை | 50 |
| 501 முதல் 3000 வரை | 100 |
| 3001 முதல் 10000 வரை | 200 |
| 10001க்கு மேல் | 300 |

மேற்கண்ட குறைவெண் வரம்பில் மகளிர் 3ல் ஒரு பங்கு இருக்க வேண்டும். அந்த கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விகிதாச்சாரம் எதுவோ, அதே விகிதாச்சாரத்தில் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு குறைவெண் வரம்பு இருக்க வேண்டும்.

- கிராம ஊராட்சித் தலைவர், கிராம சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

## கிராம சபையின் கடமைகள்

- கிராம ஊராட்சியின் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்.
- தனி நபர் பயன்பெறும் திட்டங்களுக்கான பயனாளிகள் பட்டியலுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் சமுதாய சொத்துக்களை ஏற்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம், செயல்பாடுகளை ஆய்வு செய்தல்.
- கிராம ஊராட்சிகளால் நிறைவேற்றப்படும் பணிகளின் தரத்தை சமூக மற்றும் தொழில் நுட்ப தணிக்கை மூலம் கண்காணித்தல் மற்றும் கணிப்பாய்வு செய்தல்.
- கிராம ஊராட்சிக்கான ஆண்டுத் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகளை பரிசீலித்தல்.

- சமுதாய ஒருங்கிணைப்பு மற்றும் மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.
- கிராம சபை, கிராம ஊராட்சிகளின் நிர்வாகம், திட்டச் செயல்பாடுகள் மற்றும் வரவு செலவு அறிக்கைகளைத் தணிக்கை செய்திடும் சமூகத் தணிக்கை அமைப்பாகவும் செயல்படும்.

## பொது மக்கள் பங்களிப்பு

- கிராம ஊராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள்கிராம சபையில் கலந்து கொண்டு ஊராட்சி தொடர்பாக தங்களின் கருத்துகளை எடுத்துரைக்கலாம்.
- கிராம ஊராட்சியின் நடவடிக்கைகளை ஆய்வு செய்து அதற்கு ஒப்புதல் அளித்தல் அல்லது குறைகளைத் தெரிவிக்கலாம்.
- பயனாளிகள் தொடர்பான திட்டங்கள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள உரிய அறிவுரைகளை வழங்கலாம்.
- கிராம ஊராட்சியின் வளர்ச்சித் திட்டங்கள் மீது தங்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் கிராம ஊராட்சியின் வளர்ச்சிக்காக தங்களது முழு ஒத்துழைப்பையும் அளிக்கலாம்.

## தொகுப்பறிக்கை

கிராம சபையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான அறிக்கையினை, தீர்மான நகலுடன் கிராம ஊராட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு மூன்று நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

## ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்குதல்

1. கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்தல், கிராம ஊராட்சியின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும்.
2. கிராமப் பகுதிகளில் கைப்பம்புகள், பொதுக் குடிநீர்க் குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்புகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.
3. கிராம ஊராட்சியில் உள்ள குடிநீர் ஆதாரங்களின் அடிப்படையில் வீடுகளுக்கான குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கிராம ஊராட்சி, குடிநீர் ஆதாரம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அறிக்கையின் அடிப்படையில் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கலாம். இதற்கு கிராம ஊராட்சியின் ஒப்புதல் பெறவேண்டும்.

5. கிராமப் பகுதியில் வசிப்போர், வீடுகளுக்கான குடிநீர் குழாய் இணைப்பு தேவைப்படின் கிராம ஊராட்சியிடம் எழுத்து மூலம் விண்ணப்பத்திட வேண்டும்.

6. வீட்டுக்கான குடிநீர் குழாய் இணைப்பிற்காக குறைந்தபட்சம் ரூ.1,000/– முன் வைப்புத் தொகையினை வீட்டின் உரிமையாளர் கிராம ஊராட்சியிடம் செலுத்திடவேண்டும்.

7. அனுமதிக்கப்பட்ட (Size) பரிமாணத்தில், குடிநீர்க் குழாயினை வீட்டின் உரிமையாளரே, அவரது சொந்த செலவில்அமைத்துக் கொள்ள வேண்டும்.

8. ஒவ்வொரு வீட்டுக் குழாய் இணைப்பிற்கும் மாதாந்திர குடிநீர் கட்டணமாக ரூ.30/–க்கு குறையாமல் கிராம ஊராட்சிமன்ற தீர்மானத்தின்படி நிர்ணயிக்கப்பட்டு வீட்டின் உரிமையாளர் கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும்.

9. வறட்சிக் காலங்களில் குடிநீர் ஆதாரம் குறைவாக இருப்பதாக உணரப்படின், கிராம ஊராட்சி உரிய தீர்மானம் நிறைவேற்றி, வீடுகளுக்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக நிறுத்தி வைக்க அதிகாரம் உள்ளது.

10. வீடுகளுக்கான குடிநீர் குழாய் இணைப்பு அனுமதி கோரி விண்ணப்பித்ததன் பேரில் தகுந்த காரணமின்றி குடிநீர் குழாய் இணைப்பினை கிராம ஊராட்சி வழங்கவில்லையென்றாலோ, தாமதம் என அறியப்பட்டாலோ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களை அணுகி மேல்முறையீடு செய்யலாம்.

## கிராம ஊராட்சிப் பகுதிகளில் கட்டட வரைபட அனுமதி வழங்குதல் (Building Plan)

- கிராம ஊராட்சியில் வசிக்கும் ஒருவர், புதிதாக கட்டடம் கட்டவோ, ஏற்கனவே உள்ள கட்டடத்தில் மாற்றம் செய்யவோ கருதினால் பணிகள் தொடங்கும் முன் கிராம ஊராட்சித் தலைவரிடம் உரிய படிவத்தில் முழு விவரங்கள் மற்றும் ஆவணங்களை அனுப்பிட வேண்டும்.

- கட்டடத்திற்கான வரைபடம், கட்டுமானம் அமையப்போகும் இடத்தின் தன்மை மற்றும் கட்ட உபயோகிக்கும் பொருட்களின் விவரங்களை மூன்று பிரதிகளில் அளிக்க வேண்டும்.

- கூடுதலாகக் கட்டவோ, மாற்றம் செய்யவோ வேண்டின் அதன் காரணத்தினை அளிக்க வேண்டும்.

- விண்ணப்பம், வரைபடம், இணைப்புகள் மற்றும் தேவையான இதர ஆவணங்கள் ஆகியவற்றில் விண்ணப்பதாரர் கையொப்பமிட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் நில உரிமையாளராக இல்லையெனில், உரிமையாளரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று இணைக்க வேண்டும்.

- வழிபாடு, மதசார்புள்ள கட்டடம் கட்ட வேண்டும் எனில், மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற வேண்டும்.

- சுடுகாடு, இடுகாடு போன்றவற்றின் எல்லையிலிருந்து 90 மீட்டர் தூரத்திற்குள் குடியிருப்பு / கட்டடத்தினைக் கட்ட வேண்டுமெனில், அந்த சுடுகாடு/இடுகாடு ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் அனுமதி வழங்கப்படும்.

- கட்டடங்களில் அணுகக் கூடிய இடங்களிலிருந்து குறைந்த அழுத்த மின்சக்தி கம்பிக்கும் 1.50மீ இடைவெளி பக்கவாட்டிலும், உயர் அழுத்த மின்சக்தி கம்பிகளுக்கு 1.75மீ இடைவெளி பக்கவாட்டிலும் இருக்க வேண்டும்.

- அணுக முடியாத இடங்களில் குறைந்தது 2.5மீ இடைவெளி மின்கம்பிகளிலிருந்து செங்குத்தாக இருக்க வேண்டும். அணுகக்கூடிய இடங்களில் குறைந்த 4.5மீ இடைவெளி மின்கம்பியிலிருந்து செங்குத்தாக இருக்க வேண்டும்.

- கட்டட விதிகளை மீறி கட்டப்பட்டிருப்பின் அனுமதியை ரத்து செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிக்கு உண்டு.

- கிராம ஊராட்சிக்கு மனை ஒப்புதலுடன் கூடிய கட்டட அனுமதி வழங்கும் அதிகாரம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

i) 4 குடியிருப்புகளுக்குள் மற்றும் 4,000 சதுர அடிக்கு மிகாமல் கட்டப்படும் தரை மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட கட்டடங்களுக்கு அனுமதி வழங்குதல்.

ii) 2,000 சதுர அடிக்குள் கட்டப்படும் தரை தளம் மற்றும் முதல் தளம் கொண்ட வணிக கட்டடங்களுக்கு அனுமதி வழங்குதல்.

iii) அனுமதியற்ற மனைப்பிரிவில் எவ்வித மனை ஒப்புதலோ, கட்டட அனுமதியோ கிராம ஊராட்சியால் அனுமதிக்கப்படமாட்டாது.

iv) குடியிருப்புகளுக்கு 4,000 சதுர அடிகளுக்கு மேலும், வணிக கட்டடங்களுக்கு 2,000 சதுர அடிகளுக்கு மேலும் கட்டட அனுமதி கோரும் நிகழ்வுகளில் கிராம ஊராட்சியின் வழியாக நகர் ஊரமைப்புத் துறை மண்டல துணை இயக்குனரது ஒப்புதல் பெறப்படவேண்டும்.

## ஊராட்சி ஒன்றியம்

- ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தலில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஆணையர் ஆவார்.
- ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை.
- மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஊராட்சி ஒன்றியங்கள் இடைநிலை அமைப்பாக செயல்படுகிறது.

## ஊராட்சி ஒன்றியத்தின் கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- ஊராட்சி ஒன்றிய சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட சாலைகள், அச்சாலைகளில் உள்ள பாலங்கள், சிறுபாலங்கள், தரைப்பாலங்கள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்.
- ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளை கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
- குடிநீர் மற்றும் குளிப்பதற்கான நீர் ஆதாரங்கள் அமைத்தல்.
- தொற்று நோய் பரவாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.
- ஊராட்சி ஒன்றியத்தால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்களை நடத்துதல்.

- ஊராட்சி ஒன்றிய சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல், கடைகள், விற்பனை மையங்கள், தரை மேடை கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

## இதர கடமைகள்

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளின் உபயோகத்திற்காக பொதுவான இடுகாடு, சுடுகாட்டை அமைத்துப் பராமரிக்கலாம்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் வாழும் மக்களின் தேவைக்காக குடிநீர் மற்றும் குளிப்பதற்கான நீர் ஆதாரங்களை அமைத்தல்.
- ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பொதுவான இடங்களில் கிராம ஊராட்சிகள் விளக்கு வசதி அமைக்கப்படவில்லையெனில், பொது மக்களின் நலம் மற்றும் பாதுகாப்பிற்காக விளக்கு வசதி அமைத்துத் தரலாம்.
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் சேர்ந்து பொது மருந்தகங்கள் அமைத்துப் பராமரிக்கலாம்.
- ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள எந்த ஒரு கிராம ஊராட்சியிடமும் ஒப்படைக்க அறிவிக்கை செய்யலாம்.

## அதிகாரங்கள்

- ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய குழுவின் ஒப்புதலுடனேயே செய்யப்பட வேண்டும்.
- ஊராட்சி ஒன்றிய வரவு செலவுத் திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றியத்தின் அனுமதி பெற்ற பின்னரே திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நீர்ப்பாசன ஆதாரத்தில் குடிமராமத்து வேலைகளை மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து குடிமராமத்து கட்டணத்தை நிர்ணயித்து வசூலிக்கலாம்.
- ஊராட்சி ஒன்றிய நீர்ப்பாசன ஆதாரங்களில் மீன் பிடிப்பதற்கான உரிமம் வழங்கலாம்.

# 3. மாநில நிதி ஆணைய மானியம்

மாநில அரசு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்தும். இவ்வாணையம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் வழங்குவது குறித்து ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும். இப்பரிந்துரைகள், 5 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிட உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு செய்யப்படுகிறது.

## மாநில நிதி ஆணையம்

- 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஐந்து ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மான்யம் வழங்குவது குறித்த பரிந்துரைகள் அளிக்க ஐந்தாவது மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

## ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மான்யம்

- நான்காவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியம் மாநில வரி வருவாயிலிருந்து 10 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இம்மானியத்தை 58:42 விகிதத்தில் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படுகிறது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியத்திலிருந்து கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 60:32:8 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2011–12ம் ஆண்டிற்கு ரூபாய் 3332.47 கோடியும், 2012–13ம் ஆண்டிற்கு ரூபாய் 4065 கோடியும், 2013–14ம் ஆண்டிற்கு ரூபாய் 4687 கோடியும், 2014–15ம் ஆண்டிற்கு ரூ.4968.07 கோடியும், 2015–16ம் ஆண்டிற்கு ரூ.5222.07 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படுகிறது. குறைந்தபட்ச நிதியாக ரூ.5.00 இலட்சம் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுத் தனியாக கணக்குப் பராமரிக்கப்பட்டு, தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான மின்கட்டணம் செலுத்த வழி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

- 4–வது மாநில நிதி ஆணையம் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 21.3.2013 அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்த நிதி அறிக்கையில், 4–ஆவது மாநில நிதி ஆணையம், தனது பரிந்துரையில், மாநில சொந்த வரி வருவாயில் 10 விழுக்காட்டினை ஊரக மற்றும்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் எனவும், அதில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 56 : 44 என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கலாம் என்றும் பரிந்துரைத்ததாகவும், ஆனால், கிராமப் புறங்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் 10 விழுக்காடு மாநிலத்தில் சொந்த வரி வருவாயினை வழங்கிட அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். அதன்படி, 2016–17 ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.5340.98 கோடி அனுமதித்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மாநில நிதி ஆணைய மானியம், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு வரையறுக்கப்படாத நிதியாக (Untied Fund) வழங்கப்படுகிறது.

## மானிய நிதியின் பயன்பாடு

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள், இம்மானியத்திலிருந்து நிர்வாக செலவினம் மேற்கொள்வதுடன் ஊரகப் பகுதிகளில் சொத்துக்களை உருவாக்கவும், பராமரித்திடவும் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம், குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், சாலைகள் மேம்பாடு போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படுகிறது.

- இம்மானியத்திலிருந்து ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஆண்டு ஒன்றுக்கு குறைந்தபட்ச நிதியாக ரூ.5 லட்சம் வழங்கப்படுகிறது. அத்துடன், மக்கள் தொகை அடிப்படையிலும் நிதி வழங்கப்படுகிறது.

- ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு ரூ.30லட்சம் குறைந்தபட்ச நிதியாக வழங்கப்படுகிறது. அத்துடன், மக்கள் தொகை அடிப்படையிலும் நிதி வழங்கப்படுகிறது.

## உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி (Infrastructure Gap Filling Fund)

### நோக்கம்

- மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளை இந்நிதியினைக் கொண்டு பூர்த்தி செய்வதே நோக்கமாகும்.

### நிதி ஒதுக்கீடு

- மாநில நிதி ஆணைய மானியத்தில் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் மானியத்தில் 5 விழுக்காடு இந்த நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

- ஒவ்வொரு ஆண்டிலும் அனுமதிக்கப்பட்ட நிதியில் 75 விழுக்காடு நிதி, மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படுகிறது.
- மீதமுள்ள அனுமதிக்கப்பட்ட நிதியில் 25 விழுக்காடு நிதி, மாநில அளவில், ஊரக வளர்ச்சி ஆணையரால் பராமரிக்கப்படும். இந்நிதியில் இருந்தும் ஊரகப் பகுதிகளில் மிகவும் அத்தியாவசியமான பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.

## செயல்பாடு

- மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இந்த நிதியினைக் கொண்டு கிராமப் பகுதிகளில் அவசியமான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் வகையில் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
- இப்பணிகள், கிராம ஊராட்சிகள் மூலமோ அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) மூலமோ மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பணிகள் யாவும் ஒப்பந்தப்புள்ளி முறை மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## எடுக்கப்படும் பணிகள்

- குடிநீர் பணிகள்
- தெருவிளக்குகள் அமைத்தல்
- சாலைப் பணிகள்
- பள்ளிக் கட்டடங்கள்
- கழிவறைகள்
- சமையல் கூடங்கள்
- குழந்தைகள் நல மைய கட்டடங்கள் போன்ற பணிகள்.

# 4. மத்திய நிதி ஆணைய மானியம்

- மத்திய அரசு, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய நிதி ஆணையத்தினை ஏற்படுத்தி மாநிலங்களிலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு நிதியினை மானியமாக வழங்குவது தொடர்பான பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அளிக்கும்.
- 14–ஆவது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் 2015–16 முதல் 2019–20 வரையான 5 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.
- 14–வது மத்திய நிதி ஆணையம், 2 வகையான மானியங்களை பரிந்துரைத்துள்ளது.

## 1) பொது அடிப்படை மானியம்

இந்த நிதி முழுவதும் கிராம ஊராட்சிகளுக்கே விடுவிக்கப்படுகிறது.

**இந்நிதியினைக் கொண்டு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், பராமரிக்கவும் பயன்படுத்தலாம்.**

- குடிநீர் விநியோகம்
- தெரு விளக்குகள்
- சுகாதார வசதி மற்றும் அவற்றுக்கான மின்கட்டணம் மற்றும் பராமரிப்பு பணிகள்

## 2) பொது செயலாக்க மானியம்

- கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் செயல்பாடு மற்றும் திறன் அடிப்படையில் பொது செயலாக்க மானியத்தை மத்திய அரசு வழங்குகிறது.
- இந்நிதியைக் கொண்டு கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளின் சொத்துக்களை பராமரிப்பதுடன் நிர்வாக செலவினமும் மேற்கொள்ளலாம்.

# 5. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதி

## (Pooled Assigned Revenue)

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

- ஒப்படைக்கப்பட்ட வருவாயில் இருந்து கிடைக்கும் நிதியில் ஐம்பது விழுக்காடு பங்கு நிதி, கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

- ஐம்பது விழுக்காடு பங்கு நிதி ஊரகப் பகுதிகளில் உள்ள மிகவும் அவசியமான சிறப்புப் பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

- கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் இந்த நிதி விடுவிக்கப்படுகிறது.

## நிதியின் பயன்பாடு

- இந்நிதியின் மூலம் கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சிகளுக்கான நிர்வாக செலவினம் மேற்கொள்ளப்படுவதுடன், கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

- திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள் :

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15 |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# மாநில அரசுத் திட்டங்கள்

# 6. தாய் திட்டம்
# (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்)

## திட்டத் துவக்கம்

ஊரக வளர்ச்சித் துறை திட்டங்கள் தற்போதுள்ள நடைமுறையின்படி திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு கிராம ஊராட்சியை அடிப்படை அலகாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில், 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், சராசரியாக ஒரு கிராம ஊராட்சியில் 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன.

பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சமமான அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்கப்படுவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்றத் தாழ்வுகளையும் உருவாக்கும். வள ஆதாரங்களை பகிர்ந்தளிப்பதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்து **குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில்தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக, இம்முன்னோடித் திட்டமான "தாய் திட்டம்" (தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம்) 2011–12ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

## திட்ட நோக்கம்

- குக்கிராமங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை குறித்து விரிவான கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் கண்டறியப்படும் அடிப்படைத் தேவைகளை தாய் திட்ட நிதியிலிருந்தும், இதர திட்டங்கள் மற்றும் இதர துறை திட்டங்கள் மூலமும் நிறைவு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- குக்கிராமம் குறித்த அடிப்படை வசதிகளின் விவரங்களான, குடிநீர் விநியோகம் (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், சிறுமின்விசை பம்புகள், தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள், கைப்பம்புகள்), தெருவிளக்குகள், தெருக்கள் மற்றும்

சந்துகள், இடுகாடு/சுடுகாடு, அரசு / உள்ளாட்சி கட்டடங்கள், அரசு/உள்ளாட்சி பள்ளி கட்டடங்கள், சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள், விளையாட்டு திடல்கள்,பேருந்து நிலையங்கள், சந்தைகள், கிராம ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளின் இன்றைய தன்மையை அறிந்து அவற்றை மேம்படுத்துவது அல்லது புதிதாக உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## அம்சங்கள்

குக்கிராமங்களின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

| வ.எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5-15 | 5,434 |
| 3. | 16-25 | 637 |
| 4. | 25க்கும் மேல் | 212 |
| | **மொத்தம்** | **12,524** |

ஐந்து ஆண்டுகளில் 12,524 ஊராட்சிகளிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் இத்திட்டம் முழுமையாக கீழ்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

| வ.எண் | ஆண்டு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 2,020 | 25,335 |
| 2. | 2012-13 | 2,250 | 18,581 |
| 3. | 2013-14 | 2,500 | 15,115 |
| 4. | 2014-15 | 2,741 | 12,095 |
| 5. | 2015-16 | 3,013 | 8,268 |
| | **மொத்தம்** | **12,524** | **79,394** |

அதிக குக்கிராமங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகள் அதிக நிதி உதவியைப் பெறும்.

அனைத்து கிராம ஊராட்சிகளும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## ஊராட்சிகளின் நிதி ஒதுக்கீடு விவரம் :

கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடும் மாநில அரசைச் சார்ந்தது.

| வ.எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5 குக்கிராமங்களுக்கு கீழ் | ரூ.20 இலட்சம் |
| 2 | 5 முதல் 15 வரை | ரூ.30 இலட்சம் |
| 3. | 16 முதல் 25 வரை | ரூ.40 இலட்சம் |
| 4. | 25 குக்கிராமங்களுக்கு மேல் | ரூ.50 இலட்சம் |

## திட்டக் கூறுகள் மற்றும் எடுத்துச் செய்யப்படும் பணிகள்

‘‘தாய்’’ திட்டத்தில் அனுமதிக்கப்படும் பணிகள் பின்வருமாறு வகைப்படும்.

| வ.எண் | குறைந்த பட்ச அடிப்படை தேவைகள் | கூடுதல் தேவைகள் | இதர தேவைகள் |
|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகம் | அங்கன்வாடி மையம் | அனுமதிக்கப்பட்ட இதரப் பணிகள் |
| 2 | தெருவிளக்குகள் | பொது விநியோகக் கடை | |
| 3 | சாலைகள் | சுய உதவிக்குழு கட்டடம் | |
| 4 | சுடுகாடு / இடுகாடு | கதிரடிக்கும் களம் | |
| 5 | சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் | விளையாட்டு மைதானம் | |

## (அ) குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள்

## குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகப் பணிகளான சிறுமின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனிமின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

## தெரு விளக்குகள்

புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படலாம். ஏற்கெனவே, உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் கூடுதல் தெரு விளக்குகளும் அமைக்கலாம். சூரிய சக்தி தெருவிளக்குகளும் இத்திட்டத்தில் அமைக்கலாம்.

## சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடம், தாழ்வான பகுதிகளில் அமைந்து, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படலாம்.

## இணைப்புச் சாலைகள்

பேருந்துகள் செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

## சுடுகாடு / இடுகாடு

ஒவ்வொரு சுடுகாடு/இடுகாட்டிற்கும் சுற்றுச்சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் தெருவிளக்கு போன்ற வசதிகள் தேவையின் அடிப்படையில் செய்து தரப்பட வேண்டும்.

## சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

சாலை வசதி இல்லாத சுடுகாடு / இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அல்லது பாதை அமைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் மேற்படி சாலையின் தற்போதைய தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்பாடு செய்ய வேண்டும்.

## (ஆ) கூடுதல் தேவைகள்

ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் கூடுதல் தேவைகளுக்கேற்ப அங்கன்வாடி மையங்கள், பொது விநியோகக் கடை, சுயஉதவிக் குழு கட்டடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் போன்றவையும் அமைக்கப்படும்.

## (இ) இதர தேவைகள்

ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் மேலே கூறப்பட்ட அடிப்படை மற்றும் கூடுதல் இனங்களில் உள்ள பணிகளை தவிரவும் ஏதேனும் மக்களுக்கு வேண்டிய வசதி தேவைப்படின் அப்பணியும் மேற்கொள்ளப்படும்.

தாய் திட்டத்தினைப் பொறுத்த வரை குறைந்த பட்ச தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்த பின்னரே கூடுதல் தேவை பணிகள் மற்றும் இதர தேவை பணிகள் இருப்பின் மேற்கொள்ளப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## பணிகள் தேர்வு செய்தல்

ஒவ்வொரு குக்கிராமங்களிலும் தற்போதுள்ளஅடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஒரு விரிவான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு புள்ளி விவரங்கள் சேகரிப்பட்ட பின்னர் கிராம ஊராட்சி மன்றத்தலைவர், உதவி பொறியாளர்(ஊரக வளர்ச்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம வளர்ச்சி) ஆகியோர் அடங்கிய குழுவின் மூலம் பணிகள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு கிராம சபையில் தீர்மானம் இயற்றப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

## பணிகள் மேற்கொள்ளுதல்

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகள் அனைத்தும் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. பணி தேர்வு, பணி நடைபெறுதல் மற்றும் பணி முடித்தல் ஆகியவை புகைப்படங்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

நிதி ஒதுக்கீட்டில் 5 சதவிகிதம் கணக்கெடுப்பு, ஆவணப்படுத்துதல் மற்றும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC) ஆகியவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ளலாம்.

## திட்ட செயலாக்கம்

- இத்திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் 2015–16ம் ஆண்டு வரை ஐந்து கட்டங்களாக செயல்படுத்தப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக, 2011–12ம் ஆண்டில் 2,020 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 25,335 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.680 கோடி ஒதுக்கீட்டில் 49,370 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2012–13ம் ஆண்டில் இத்திட்டம் 2,250 கிராம ஊராட்சிகளில் உள்ள 18,581 குக்கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது. இதற்கென ரூ.750 கோடி ஒதுக்கீட்டில்47,182 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2013 – 14 ஆம் ஆண்டில் இத்திட்டம் 2500 கிராம ஊராட்சிகளில் உள்ள 15115 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் 49,221 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2014 – 15 ஆம் ஆண்டில் இத்திட்டம் 2741 கிராம ஊராட்சிகளில் உள்ள 12,095 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் 45,926 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 2015 – 16 ஆம் ஆண்டில் இத்திட்டம் 3013 கிராம ஊராட்சிகளில் உள்ள 8268 குக்கிராமங்களில் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் 40,070 பணிகள் எடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு 12,524 கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள 79,394 குக்கிராமங்களிலும் ரூ.3680 கோடி ஒதுக்கீட்டில் 2,31,769 பணிகள் எடுக்கப்பட்டு சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

## திட்ட செயலாக்க அலகு

- மாநில அரசின் முழு நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான நிதி மாநில அரசிடமிருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு வழங்கப்படுகிறது.
- தேர்ந்தெடுக்கப்படும் கிராம ஊராட்சிகளில் கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் பணிகளுக்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது.

- உதவி செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் அனுமதி வழங்குவார்கள்.

- வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நிறைவேற்றப்படும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஒன்றியப் பொறியாளர் |
| கிராம ஊராட்சி அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் |

## 7. முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்

**நோக்கம்** : கிராமப் பகுதிகளில் வறுமையிலும் வறுமையில் உள்ள வீடு இல்லாத ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**நிதி ஆதாரம்** : இத்திட்டத்திற்கு தேவையான முழு நிதியையும் மாநில அரசே வழங்குகிறது.

**அலகுத் தொகை – ரூ.2,10,000/-**

| | |
|---|---|
| ஒரு வீட்டிற்கான கட்டுமானத் தொகை | ரூ. 1,80,000/- |
| சூரிய சக்தி விளக்கிற்கான தொகை | ரூ. 30,000/- |
| **மொத்தம்** | **ரூ. 2,10,000/-** |

### தகுதி வாய்ந்த பயனாளிகள் :

கிராமப் பகுதிகளில் வீடு இல்லாத, வீட்டு மனை பட்டா உடைய வறுமையிலும் வறுமையில் உள்ள ஏழை மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த பயனாளிகள் ஆவர்.

### சிறப்பு அம்சங்கள் :

1. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்.
2. ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, தாழ்வாரம் மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும்.
3. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்படும்.
4. ஒவ்வொரு வீட்டிலும் சூரிய சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இரு முனைய விளக்குகள் (LED) பொருத்தப்படும்.
5. கூடுதல் வசதியாக ஒவ்வொரு பயனாளியும் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மீட்டர் மற்றும் மின்மாற்றிப் பொருத்தப்பட்ட மின் இணைப்பும் பெறலாம்.
6. வீடுகள் கட்டும் பணியினை நேரடியாக பயனாளிகள் மேற்கொள்ளலாம்.

7. சூரிய சக்தி விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் செயல்படுத்தப்படும்.

8. இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்கான நில எடுப்பு ஏதும் செய்யப்படமாட்டாது. வீட்டுமனைப்பட்டா உள்ளவர்கள் மட்டுமே தகுதியானவர்கள்.

9. அமைக்கப்படும் சூரிய சக்தி விளக்குகள் மற்றும் அத்துடன் கூடிய இதர உபகரணங்களை பயனாளிகள் முறையாக பயன்படுத்தும் விவரங்களைத் தெரிவிக்கும் சிற்றேடுகள் விநியோகம் செய்யப்படும்.

10. ஒவ்வொரு பசுமை வீடும் அனுமதிக்கப்பட்ட பரப்பளவான 300 சதுர அடிக்கு மிகாமல் இதற்கென தனியாக வடிவமைக்கப்பட்டவாறு கட்டப்படவேண்டும். இதன் வடிவமைப்பில் மாறுதல்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

11. இருப்பினும் அனுமதிக்கப்பட்ட வீட்டின் பரப்பளவான 300 சதுர அடியில் வீட்டின் வடிவமைப்பில் மாறுதல் செய்யாமல், சமையலறை மற்றும் படுக்கை அறை ஆகியவற்றை இட அமைவிற்கேற்ப மாற்றி அமைக்க அனுமதிக்கப்படும்.

12. பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து வழங்கிவிட்டு அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

13. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் முழு சுகாதார திட்ட நிதி ஒதுக்கீட்டினை ஒருங்கிணைத்து அனைத்து வீடுகளிலும் ஒரு கழிவறை அமைக்கப்படும்.

14. செராமிக் ஓடுகளில் இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்ட சின்னம் அனைத்து வீடுகளிலும் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் பொருத்தப்படும்.

15. இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.

16.. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து ஒரு பயனாளிக்கு தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படும்.

17. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM(G)) திட்டத்துடன் ஒருங்கிணைந்து கழிப்பறை கட்ட ரூ.12,000/– வழங்கப்படும்.

## வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

1. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர், கிராம ஊராட்சிவாரியாக கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கையை முடிவு செய்வார்.

2. கிராம ஊராட்சியில் வறுமையிலும் வறுமையில் உள்ள பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு அவை கிராம சபையில் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பணிகளுக்கான உத்தரவு வழங்குதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களால் நில உரிமை, இடம் ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்குவார்.

## திட்ட செயலாக்கம்

- ஒவ்வொரு வருடமும் மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.
- பயனாளிகள் வீடுகளைக் கட்டுவதற்கு ஒன்றிய / உதவி பொறியாளர்கள் தேவையான தொழில்நுட்ப உதவி புரிவார்கள்.

## பயனாளிகளின் தகுதி

இத்திட்டத்தில் பயனாளிகள் கீழ்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் உள்ள வறுமையிலும் வறுமையில் உள்ள ஏழை மக்களாக இருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை இடத்திற்கு சொந்தக்காரராக இருக்க வேண்டும்.
- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டுமனை பட்டா இருக்க வேண்டும்.

- அந்த கிராம ஊராட்சியில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன்பெற்றவராக இருக்கக் கூடாது.

## பயனாளிகள் தேர்வு

- பயனாளிகள் தேர்வு பட்டியல் தயாரிக்கப்படும்போது, மாற்றுத் திறனாளிகள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், ஹெச்ஐவி/எய்ட்ஸ்/டிபி ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என துணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் பெற்றவர்கள், வெள்ளம், தீ விபத்து ஆகிய இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோருக்கும் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் அடங்கிய குழு, தகுதியான பயனாளிகளை தேர்வு செய்யும்.

## கிராமவாரியான வீடுகள் ஒதுக்கீடு செய்தல்

**உள் ஒதுக்கீடு : இத்திட்டத்திற்கென தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தில் பசுமை வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.**

1. ஆதிதிராவிடர் – 29%
2. பழங்குடியினர் – 1%
3. இதர பிரிவினர் – 70%

மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

## திட்டச் செயலாக்கம்

1. பசுமை வீடுகளின் கட்டுமானத்தை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உதவியுடன் பயனாளிகளே மேற்கொள்வர்.
2. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஒருங்கிணைந்து சூரிய சக்தி விளக்கு அமைக்கும் பணியை மேற்கொள்ளும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம ஊராட்சி அளவில் | : | கிராம ஊராட்சித் தலைவர் |

# 8. சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம் :

சட்ட மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதிக்குத் தேவைப்படும் முக்கியப் பணிகளைச் செயல்படுத்திடவும் மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## சிறப்பு அம்சங்கள் :

இத்திட்டம், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இதன்படி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது தொகுதியில் தேவைப்படும் பணியினைக் கண்டறிந்து அப்பணியினை செயல்படுத்திட பரிந்துரைப்பார். ஊரக மற்றும் நகர்ப் புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு :

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 2011–12ஆம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கான ஒதுக்கீடு :

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில், 21 விழுக்காடு நிதி ஆதி திராவிடர்/ பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் ஊரகப் பகுதிகள் அல்லது நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத நிதி :

மொத்த ஒதுக்கீடான ரூ.2.00 கோடியில் ரூ.1.10 கோடி வரையறுக்கப்பட்ட நிதியாகும். அத்தொகையில் அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளையும், மீதமுள்ள ரூ. 90.00 இலட்சம் வரையறுக்கப்படாத நிதியில் சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளையும் தேர்வு செய்யலாம்.

## திட்டச் செயலாக்கம்

### 1. வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து செய்யப்படும் பணிகள்

வரையறுக்கப்பட்ட நிதி ரூ. 1.10 கோடியில் கீழ்க்கண்ட பணிகள் மட்டும் செலவு செய்யப்பட வேண்டும்.

**1.1 பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 25.00 இலட்சம்** : 2015–16 ஆம் நிதியாண்டில் பள்ளிகளுக்கு (மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றியம் / அரசு பள்ளிகள் மட்டும்) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 25.00 இலட்சம் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிவறை வசதிகள் (குறிப்பாக மாணவிகள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தனித்தனியாக கழிப்பறைகள்) குடிநீர் விநியோகம், பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர், பள்ளிகளில் வகுப்பறைகள், நூலகங்கள் மற்றும் ஆய்வுக்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**1.2 அங்கன்வாடி கட்டடங்கள் / சமையல் கூடங்கள் / சமையல் கூடங்களை நவீனப்படுத்திட ரூ. 20 இலட்சம்**

பெரும்பான்மையான அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையல் கூடங்கள், பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதால் அவைகளுக்கு புதிய கட்டடம் கட்டித்தர இந்த அரசால் தீர்மானிக்கப்பட்டு அதனைப் படிப்படியாக நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்புக்கொண்டு நவீனப்படுத்த ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் சத்துணவு சமையல் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர் புற பகுதிகளில் எடுத்துச் செய்யவும் மேலும் அங்கன்வாடி சமையல் அறைகளை எரிவாயு இணைப்புக் கொண்டு நவீனப்படுத்தவும் ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அங்கன்வாடி மையங்கள் கட்டுதல் / அங்கன்வாடி சமையல் அறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முற்றிலும் நிறைவு பெற்றுள்ள இடங்களில் இப்பணிகள் தேவையில்லாத பட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கான உரிய சான்றிதழை சம்பந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலர் / திட்ட அலுவலரிடமிருந்து (ICDS) பெற்ற பின்னர் வரையறுக்கப்பட்ட கூறு நிதிக்கான பணிகளில் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை தேர்வு செய்துகொள்ளலாம்.

**1.3 குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 15 இலட்சம்** : குறிப்பாக கோடை காலத்தில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக தற்போதுள்ள குடிநீர் வழங்கும் நீர் ஆதாரத்தினைப் பெருக்குதல், மின் விசை இறைப்பான், சிறு மின்விசை இறைப்பான் போன்ற பணிகள் மேற்கொள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் ரூ. 15 இலட்சத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**1.4 இதர வரையறுக்கப்பட்ட பணிகளுக்கு ரூ. 50 இலட்சம் :** வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் மீதமுள்ள ரூ. 50 இலட்சத்தில் சட்ட மன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின்

அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ. 50 இலட்சத்தில் எடுத்துச் செய்ய பரிந்துரைக்கலாம்.

## அ) ஊரகப் பகுதிகளில்

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களின் கூரை மேல் சூரிய ஒளி சக்தி நிறுவுதல் (மத்திய அரசு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்.

2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்ச்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்)

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்

8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல்.

9. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதினால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

10. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்.

11. பொது விநியோகக் கடை கட்டடங்கள் கட்டுதல்.

12. உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடம் கட்டுதல் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

## ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்

1. சூரிய சக்தி தெரு விளக்குகள் நிறுவுதல் / அரசு கட்டிடங்களில் மேற்கூரை சூரிய சக்தி ஆலைகள் நிறுவுதல், நகர்புற பகுதிகளில் LED தெருவிளக்குகள் நிறுவுதல் (மத்திய அரசு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திலிருந்து, மான்யம் பெற வழிவகை உள்ளது. அதனைப் பெற்று உரிய திட்டக் கணக்கில் தவறாமல் செலுத்திடல் வேண்டும்.

2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல்

3. மிகவும் பழுதடைந்துள்ள தார்ச் சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்ச் சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)

4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்

5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு ஆதரவற்றோர் விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.

7. பாலங்கள் கட்டுதல்

8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள்அமைத்தல்

10. புதிய பொதுப் பூங்காக்கள்அமைத்தல்

11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்

12. பொது விநியோகக் கடை கட்டடங்கள் கட்டுதல்.

13. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களை வாங்குதல்.

14. வக்ஃப் வாரியத்தில் (Wakf Board) பொது சொத்தாக பதிவு செய்யப்பட்ட மயானங்களுக்கு சுற்றுச்சுவர்/வேலி அமைத்தல். தற்போது வக்ஃப் வாரியத்திற்கென பொறியியல் பிரிவு இல்லை என்பதினால், இவ்வேலைகளை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

15. உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடம் கட்டுதல் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்குதல். இது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாகக் கருதப்படும்.

## 2. வரையறுக்கப்படாத தொகையான ரூ.90.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எதிர் மறையான பட்டியல்/ தடை செய்யப்பட்ட கீழ்கண்ட பணிகளைத் தவிர, எந்த பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியின்கீழ் எடுத்து செய்யலாம். அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.90.00 இலட்சத்தில் மேற்கொள்ளலாம்.

பயணிகள் நிழற்கொடை அமைப்பது இக் கூறில் எடுத்துச் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

## 3. எதிர் மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை எடுத்து செய்ய இயலாது.

3.1. மத்திய, மாநில அரசு துறைகள் (பொது துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலக கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

### விதிவிலக்கு

(i) நேரடி கொள்முதல் நிலையங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்

(ii) அரசாணை நிலை எண். 179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை, நாள் 19.12.2013ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்படாத கூறு நிதியிலிருந்து மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் இதுவரை சுற்றுச்சுவர் கட்டாமல் இருப்பின் இப்பணியினை நடப்பு 2016–17ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள வேண்டும்.

3.2 தனி நபர் / குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல் (விதிவிலக்கு) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட வழிகாட்டுதலின்படி பேரூராட்சிகளில் புதிய வீடுகள் கட்டுதல்)

3.3 அனைத்து வகையான புதுப்பித்தல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு** – அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2006 வரை கட்டப்பட்டுள்ள வீடுகளை இந்திரா நினைவு குடியிருப்பு (IAY), தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடு உட்பட, வீடு ஒன்றுக்கு ரூ.50,000–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இருப்பினும், எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.4 அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்,

### விதிவிலக்கு

(i) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

(ii) அரசாணை (1டி) எண்.405, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.–1) துறை நாள் 17.8.2010 மற்றும் அரசு கடித (1டி) எண்.653,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நாள் 31.12.2012–ல் குறிப்பிட்டுள்ளபடி மாற்று திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.5.00 இலட்சம் அல்லது அதற்கு மேலான மதிப்பிற்கு வாங்குதல்.

(iii) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, மன வளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

(iv) உடற்பயிற்சி / ஜிம்னாசியம் கூடத்தில் உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல்.

(v) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரிய மின் ஒளி கலன்கள் நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

**3.5.** அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், கல்லூரிகளில் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**3.6.** அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.

**3.7.** மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

**3.8.** நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

**3.9.** முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

**3.10.** அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

**3.11.** மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

**3.12.** குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

3.13. சரளை / கப்பி சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

3.14. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

## திட்டம் செயல்படுத்துதல் :

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| தொகுதி அளவில் | : | சட்டமன்ற உறுப்பினர் |
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 9. தன்னிறைவுத் திட்டம்

## துவக்கம்

ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை, பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011–12–ஆம் ஆண்டு முதல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## நோக்கம்

- தனிநபர் மற்றும் குழுக்கள் தங்களது கருத்துக்களை பரிமாற்றம் செய்து வெளிப்படையான மற்றும் பொறுப்புடன் கூடிய முயற்சியின் மூலம் பயன்தரத்தக்க சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.
- திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளில் கிராமப்புற சமுதாயத்தை நேரடியாக ஈடுபடுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## மக்கள் பங்களிப்பு

- பொதுமக்கள், தெரிவு செய்யப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டும்.
- அரசால் மூன்றில் இரண்டு பங்கு தொகை வழங்கப்படும்.

## திட்டக் கூறுகள் மற்றும் எடுத்துச் செய்யப்படும் பணிகள்

## பணிகளை தேர்வு செய்தல்

- இத்திட்டத்தின்கீழ் பணியினை எடுத்துச் செய்வதற்கான கோரிக்கை, தனிநபர், குழு, தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தோ அல்லது அப்பகுதி மக்களிடமிருந்தோ உருவாகலாம்.
- தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல் தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.
- தேவை மற்றும் செயல்படுத்தத்தக்க தன்மையினை உறுதிபடுத்திய பின்னரே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

- நிதி ஒதுக்கீட்டைவிடத் தேவையான பணிகளின் மதிப்பீடு அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

- மாநில அளவில் செயல்படுத்தப்படும் சிறப்பு திட்டங்களுக்காக ஊரக வளர்ச்சி இயக்குநர், தனியார் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பங்களிப்பை பெறலாம்.

## அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியல்

- அரசு பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.

- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் , துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் சுற்று சுவர் / சுற்று வேலி அமைத்தல். இடுகாடுகளுக்கு சுற்று சுவர் கட்டுதல். தமிழ்நாடு இஸ்லாமிய அறக்கட்டளை குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட பொது இஸ்லாமிய அறக்கட்டளைக்கு சொந்தமான இடுகாடுகளுக்கு சுற்றுசுவர் கட்டுதல் பணியும் செய்யப்படலாம்.

- ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல். எங்கெல்லாம் நூலகங்கள் கட்டப்படுகின்றனவோ, அங்கெல்லாம் புத்தகங்கள் வாங்குவதற்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என கவனத்தில் கொள்ள வேண்டும்.

- கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.

- அனைத்து சமூகச் சொத்துக்களையும் பராமரித்தல். முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் ஆண்கள் சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படலாம்.

- ஆடவர் மற்றும் மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்

- பாலங்கள் அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை

புதுப்பித்தல். தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.

- பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு, நீரூற்று, தெரு விளக்குகள் (சூரிய சக்தி ஒளி விளக்குகள் உட்பட) போன்றவற்றை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

- பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டடங்களுக்குத் தேவையான அறைகலன்கள், கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள், உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக்கூடாது.

- திடக்கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து வகைப்பணிகள் மற்றும் சுற்றுச் சூழலின் சுகாதார நிலையினை மேம்படுத்தும் பணிகள்.

- அரசு கட்டடங்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொது கட்டடங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்கு சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல்.

- குடிநீர் வழங்குவதற்கான எதிர் சவ்வூடு பரவுதல் (RO Plant) தொழில்நுட்ப ஆலை அமைத்தல்.

## தடை செய்யப்பட்ட பணிகள்

சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

1) மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு –** ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வசிப்பிடங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல். அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்தக் குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

2) அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு –** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அங்கன்வாடிகள், சத்துணவு மையங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். அதேபோல் திடக்கழிவு மேலாண்மைக்காக மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் சிறு லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்கலாம்.

3) அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கான பணிகளை மேற்கொள்ளுதல்.

4) அனைத்து வணிக நிறுவனங்கள் /அலகுகள் குறித்த பணிகள்.

5) மானியம் மற்றும் கடன் மத்திய மற்றும் மாநில / யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்

6) நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7) முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக தொகை மீளச் செலுத்துதல்.

8) தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்

9) அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

10) மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/ குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்

11) குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்

**விதிவிலக்கு :**

i) மாவட்ட ஆட்சியர் அவசியம் எனக் கருதினால், பொதுப்பணித்துறை கண்மாய்கள் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித் துறையினரால்

தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தேவையிருப்பின் நீர் நிலைகள், வரத்து கால்வாய் மற்றும் உபரி நீர் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணியினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் / IAMWARM போன்ற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளலாம்.

ii) இதே போல நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின்கட்டுப்பாட்டில் உள்ள அத்தியாவசிய நீர் ஆதார குளங்களை தூர்வாரும் பணியினை 50% பொதுமக்களின் பங்களிப்புத் தொகையுடன் ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றி செய்யலாம்.

12) சரளை / கப்பிச் சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்).

13) சோடியம் ஆவி விளக்குகள்/உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

## திட்ட செயலாக்க அலகு

- பொதுமக்களின் நிதி பங்கீட்டுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான நிதி மாநில அரசால், பொதுமக்களின் பங்களிப்பிற்கேற்ப மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு வழங்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளுக்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது.
- உதவி செயற்பொறியாளர், (ஊரக வளர்ச்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக உதவி பொறியாளர் ஆகியோர் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் அனுமதி வழங்குவார்கள்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் பணிகளை நிறைவேற்றுவார்.

## திட்ட செயலாக்கம்

- சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.
- மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்குடன் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பங்களிப்பு செய்த பணிகளை பொது மக்களோ

அல்லது பணம் செலுத்தியவரோ நேரடியாக செயல்படுத்திட அனுமதி கோரும் நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான அனுமதியை வழங்கலாம்.

பொதுப்பணித்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய்கள் தூர்வாரும் பணியைப் பொருத்த மட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தால் கூட ஒப்பந்தப் புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) |
| ஊராட்சி அளவில் | : | ஊராட்சி மன்றத் தலைவர் |

## 10. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

### நோக்கம்

மாவட்டங்களின் தேவைக்கேற்ப சாலைகளை தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதும், பல்வேறு வகையான ஊரகச்சாலைகள் மேம்பாடு செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### செயலாக்கம்

இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

### நிதி ஒதுக்கீடு

- இத்திட்டம் 100 விழுக்காடு மாநில அரசின் நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பிரிவு – 1.**

இப்பிரிவின் கீழ் தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்ய எடுத்துக்கொள்ளப்படும்.

**பிரிவு – 2.**

இப்பிரிவின் கீழ் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**பிரிவு – 3.**

இப்பிரிவின் கீழ் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### பணிகள் தேர்வு:

- சாலை இணைப்பு இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை இணைப்பு வழங்கப்படுகிறது.

- ❖ பேருந்து மற்றும் சிற்றுந்து செல்லும் சாலைகளை மேம்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- ❖ சந்தை, கல்வி / சுகாதார மையங்களை இணைக்கும் முக்கிய இணைப்பு சாலைகள் மற்றும் பயன்பாடு அதிகம் உள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது.
- ❖ குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலைப்பணிகள் தேர்வு செய்யப்படுகிறது.
- ❖ கடந்த ஐந்து ஆண்டுகளில் வேறு எந்த ஒரு ஊரக வளர்ச்சி திட்டங்களின் கீழ் தேர்வு செய்யப்படாத சாலைகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும்.

## திட்ட செயல்பாடு

- மாவட்ட ஆட்சித்தலைவர் இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவார்.
- இப்பணிகள் யாவும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998–ன்படி செயல்படுத்தப்படும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களைப் பெற அணுக வேண்டிய அலுவலர்கள் :

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ). |

# 11. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு

## துவக்கம்

- 2001 –ஆம் ஆண்டில் பெண்களுக்கு மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்த இத்திட்டம் துவக்கப்பட்டது.

## நோக்கம்

- பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மற்றும் கிராமப்புற பெண்களின் தனித்துவம், பாதுகாப்பை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## திட்ட செயலாக்கம்

### சுகாதார வளாகங்கள் அமைத்தல்

- 2001–ஆம் ஆண்டு முதல் 2004–ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் அப்போதிருந்த ஒவ்வொரு 12,618 கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

- ஒவ்வொரு வளாகத்திலும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், மின்மோட்டாருடன் நீரேற்று அறை, தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றுடன் தேவையான தண்ணீர் விநியோகத்தினை வளாகத்தில் உறுதி செய்யப்பட்டது.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 2011–12 ஆம் ஆண்டில், பழுதடைந்த நிலையிலிருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

- தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின் வசதி கிராம ஊராட்சிகளால் மேற்கொள்ளப்பட்டு தொடர் பராமரிப்பு செய்யப்படுகிறது.

- வளாகத்தின் உபயோகிப்பாளர்கள் கண்டறியப்பட்டு பயன்படுத்துவோர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுக்கள் வளாகத்தின் தினசரி பராமரிப்பை மேற்கொள்கின்றனர்.

## பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல்

- புனரமைக்கப்பட்ட மகளிர் சுகாதார வளாகங்களை முறையாக பயன்படுத்தவும், பராமரிக்கவும் ஒவ்வொரு வளாகத்திற்கும் பயன்படுத்துவோர் குழு ஒன்றினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை முறையாக பயன்படுத்தவும், பராமரிக்கவும், பயன்படுத்துவோர் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிகாட்டி புத்தகம் தயாரிக்கப்பட்டு அனைத்து பயன்படுத்துவோர் குழுக்களுக்கும் கையேடாக வழங்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல்

- மகளிர் சுகாதார வளாகத்தின் பராமரிப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில், கண்காணிப்புக் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டுள்ளது.

- குழுக் கூட்டத்தில் விவாதிக்க (வேண்டியவை) ப்படுபவை
  - √ ஒவ்வொரு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தின் பயன்பாட்டு நிலை
  - √ மகளிர் சுகாதார வளாகத்தினை பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை
  - √ வளாகங்களை கிராம ஊராட்சி கால முறையில் பராமரிக்கும் விதம்
  - √ பயன்படுத்துவோர் குழுக்களின் கருத்துக்கள்/ஆலோசனைகள்
  - √ கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அல்லது மண்டல அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் / ஆலோசனைகள்

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| கிராம அளவில் | : | ஊராட்சி மன்றத் தலைவர் |

# 12. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

## துவக்கம்

- 2012–13ம் ஆண்டில் ஆண்களுக்கு மேம்பட்ட சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொருட்டு இத்திட்டம் துவக்கப்பட்டது.

## நோக்கம்

- பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்த கிராமப்புற பெண்களுக்கு உறுதி செய்து தரபட்டது போன்று ஆண்களுக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## திட்ட செயலாக்கம்

### சுகாதார வளாகங்கள் அமைத்தல்

- 2012–13ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களில் தலா ரூபாய் 4,00,000/– மதிப்பீட்டில் 570 சதுர அடி பரப்பளவில் 770 ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு வளாகமும் 8 கழிப்பறைகளை உள்ளடக்கியதாக இருக்கும். தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் கல் ஆகியவையும் இருக்கும்.

- இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

- தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதி கிராம ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுகிறது.

### பயன்படுத்துவோர் குழுக்கள் அமைத்தல்

- வளாகத்தின் உபயோகிப்பாளர்கள் கண்டறியப்பட்டு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது

- இதற்கென அமைக்கப்பட்ட பயன்படுத்துவோர் குழுக்கள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவதுபோல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பினை மேற்கொள்கின்றனர். தொடர்பராமரிப்பு சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது.

## கண்காணிப்பு குழுக்கள் அமைத்தல்

- ஆண்கள் சுகாதார வளாகத்தின் பராமரிப்பை கண்காணிக்க மாவட்ட அளவில் மற்றும் வட்டார அளவில், கண்காணிப்பு குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டுள்ளது.

- குழுக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டியவை

  √ சுகாதார வளாகத்தினை பயன்படுத்துவோர் குழுக்கள் பராமரிக்கும் முறை

  √ சுகாதார வளாகங்களை கிராம ஊராட்சி கால முறையில் பராமரிக்கும் விதம்

  √ பயன்படுத்துவோர் குழுக்களின் கருத்துக்கள் / ஆலோசனைகள்

  √ கண்காணிப்பு குழு உறுப்பினர்கள் அல்லது மண்டல அலுவலர்கள் ஆய்வின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் / ஆலோசனைகள்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 13. தூய்மையான கிராம இயக்கம்

## துவக்கம்

- “தூய்மையான கிராம இயக்கம்” 2003–04 ஆம் ஆண்டில் முதன் முதலாக துவக்கப்பட்டு 2005–06ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. 2011–12ம் ஆண்டில் மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் :

- திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், குறிப்பாக மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை உணர்த்துதல்.
- அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியனவற்றில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
- சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.
- தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதர துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைத்தல்.

## நிதி ஒதுக்கீடு

- தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்தவெளி மலம் கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக 100% சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதி அடைகின்றன.
- ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில் 31 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு ‘‘தலா ரூ. 5.00 இலட்சம் ஊக்கத்தொகை’’ வழங்கப்படுகிறது.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 14. ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

## திட்ட துவக்கம்

2015–16ம் ஆண்டு முதல் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் துவங்கப்பட்டு, பின்னர் 7,000 கிராம ஊராட்சிகளிலும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது.

## நோக்கம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு அரசு தொடர்ந்து அதிக முன்னுரிமை அளித்து வருவதுடன், கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்துவதாகும்.

## திட்ட செயலாக்கம்

முதற்கட்டமாக, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய நகர்ப்புறத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத் தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய தொழிற்சாலைகள்/வணிக அமைப்புகள்/ கல்வி நிறுவனங்கள் அடங்கிய கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது மாநகராட்சி ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் உள்ள ஊராட்சிகள், 300 குடும்பங்களுக்கு மேலாக உள்ள கிராம ஊராட்சிகளும் கண்டறியப்பட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## ஊராட்சி அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்

i. ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட கிராம ஊராட்சியாக இருப்பின் இத்திட்டம் செயல்படுத்துவதற்கு அந்த கிராம ஊராட்சியே ஒரு தனி அலகாகும். பெரிய ஊராட்சியாக இருப்பின் ஒரு குக்கிராமத்தையோ அல்லது குக்கிராமங்கள் தொகுப்பாகவோ இத்திட்டம் செயல்படுத்த அலகாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ii. திடக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Biodegradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.

iii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மக்கும் கழிவுகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள திடக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கு ஒரு குழியும் தோண்டப்படுகிறது.

iv. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சியில் 150 குடும்பத்திற்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

v. "தூய்மைக் காவலர்கள்" எனப்படும் இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் திடக் கழிவுகளை குழிகளுக்கு எடுத்துச் சென்று கொட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

vi. இப்பணியாளர்களுக்கான ஊதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே பணி வழங்க முடியும் என்பதால் குறிப்பிட்ட நிதியாண்டில் ஏற்கெனவே 100 நாட்கள் பணி முடித்த தூய்மை காவலர்களாக ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பதில், புதிய தொகுப்பு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டு, இத்திட்டம் வருடம் முழுவதும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

vii. திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதிவண்டிகள், தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல் சட்டை, கையுறை மற்றும் தொப்பி ஆகியவை, பிரித்தல் மற்றும் சேமிப்பதற்கான கொட்டகைகள், தெருவில் வைக்கும் குப்பை தொட்டிகள், நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

viii. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை தூய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

ix. மக்கிய உரம், மற்றும் மறு சுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திடக் கழிவு மேலாண்மை வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

## திட்ட கண்காணிப்புக் குழு அமைத்தல்

தினசரி செயல்பாடுகளை கண்காணிக்க, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைக் குழு ஒன்று கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

(1) கிராம ஊராட்சித் தலைவர், (2) கிராம ஊராட்சித் துணைத்தலைவர், (3) சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர், (4) சம்மந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி மற்றும் (5) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தளப் பொறுப்பாளர்.

வார்டு உறுப்பினர் மற்றும் குக்கிராமம் பிரதிநிதித்துவம் உடைய/கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

## 15. பள்ளிக் கழிப்பறைகளை பராமரித்தல்

### திட்ட துவக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் 2015–16 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### திட்ட நோக்கம்

ஊரக பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

### சிறப்பு அம்சங்கள்

- ஒவ்வொரு அரசு/ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள கழிப்பறையை சுத்தம் செய்ய கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக அல்லது தனியார் நிறுவனங்கள் (Outsourcing) மூலமாக சுகாதார பணியாளர் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களால் ஈடுபடுத்தப்படுவர்.
- பள்ளிகளில் மாணவ, மாணவியரின் கழிப்பறையை சுத்தப்படுத்தி சுகாதாரமாக பராமரித்தல் சுகாதார பணியாளரின் பொறுப்பாகும்.
- மகளிர் பள்ளிகளில் பெண் சுகாதார பணியாளர் மட்டுமே ஈடுபடுத்தப்படவேண்டும்.
- தினந்தோறும் இருவேளைகளில், அதாவது காலையிலும் மாலையிலும் கழிப்பறையை கண்டிப்பாக சுத்தப்படுத்தவேண்டும்.
- பள்ளி தலைமையாசிரியர் பள்ளி கழிப்பறையை சுத்தப்படுத்துவதை கண்காணிப்பார். வாரத்தில் ஒருமுறை ஊராட்சித்தலைவர், வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியவர்கள் இதனை ஆய்வு செய்வார்கள்.
- வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வள மையத்தின் மேற்பார்வையாளர் மற்றும் உதவி தொடக்க கல்வி அலுவலர்/ கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர் ஆகியோர்கள் இணைந்து பள்ளி கழிப்பறை பராமரிப்பதை காலாண்டு இடைவெளியில் பள்ளி தலைமையாசிரியர்களை ஆய்வு செய்வார்கள்.
- பள்ளிக் கழிப்பறையை சுத்தமாக பராமரிப்பதை ஆய்வு /கண்காணிப்பு செய்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பள்ளி கல்வித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையை சார்ந்த மாவட்ட அலுவலர்களை மண்டல அலுவலர்களாக நியமனம் செய்யப்படுவார்கள்.

## நிதி ஒதுக்கீடு

2015–16ம் ஆண்டில் சுகாதார பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகையும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையும் பின்வருமாறு.

| வ. எண் | பள்ளிகள் விபரம் | சுகாதாரப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகை ரூ. | தூய்மை செய்வதற்கான பொருட்கள் வாங்க மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய பள்ளி /அரசு ஆரம்பப் பள்ளி | 750/– | 300/– |
| 2 | ஊராட்சி ஒன்றிய பள்ளி /அரசு நடுநிலைப் பள்ளி | 1,000/– | 500/– |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி | 1,500/– | 750/– |
| 4 | அரசு மேல்நிலைப் பள்ளி | 2,000/– | 1,000/– |

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

மாநில அளவில் : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.

மாவட்ட அளவில் : மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

வட்டார அளவில் : வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)

# 16. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம்

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் விதமாகவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையிலும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## மேற்கொள்ளப்படும் பணிகள்

- கிராமங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்தல்.
- அரசால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் விடுதிகள் ஆகியவற்றிக்கு அடிப்படை வசதிகள் செய்தல்.
- புதிய வீடுகள் கட்டுதல்.
- விவசாய வேலைகள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை செய்யும் பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல்.
- இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்குதல்.
- அரசு பணியாளர் தேர்வாணையங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களுக்கு பயிற்சியளித்தல்.
- சீருடைப் பணிகளில் தேர்வு பெறுவதற்கான பயிற்சிகள் அளித்தல்.
- பல்வேறு திட்டங்களில் தனி நபர்களுக்கான மானியக் கடன்கள் பெறுவதற்கான பயனாளி பங்குத் தொகை வழங்குதல்.

## நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஆதாரம் 100% மாநில அரசால் வழங்கப்படுகிறது.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்<br><br>தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 17. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம்

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி, கழிப்பறைகள் ஆகியவைகளை ஏற்படுத்துதல் மற்றும் தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## பணிகள் தேர்வு செய்தல்

மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழுக்கள் மூலம் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு பணிகள் தேர்வு செய்யப்படும்.

## நிதி ஒதுக்கீடு

2015–16 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடி ஆகும்.

## எடுக்கப்படும் பணிகள்

## பள்ளிக் கட்டடங்கள்

- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் தட்டு ஓடு பதித்த கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் கட்டப்படும்.
- புதிய பள்ளிக் கட்டடங்கள் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள காலி இடத்தில் அமைக்கப்படும்.
- பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.
- பள்ளி கட்டடங்களுக்கு வெள்ளை / கலர் வர்ணம் (கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் வர்ணம் பூசிய கட்டடங்கள் தவிர ஏற்கனவே உள்ள பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் சீரமைக்கப்படும்.

## சமையல் அறை

- சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் புதிய சமையல் அறைகள்மழைநீர் சேமிப்பு அமைப்புடன் கட்டப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும்.
- ஏற்கனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் போதுமான இடம் இல்லாதிருப்பின் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ள கூடுதல் அறைகள் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

### குடிநீர் வசதி

- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின் அவை பழுது நீக்கிச் சீரமைக்கப்படும்.
- குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள், தேவைப்படும் இடங்களில் ஊராட்சியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படும் இடங்களில் ஏற்படுத்தப்படும்.
- அவசியமான இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்.

### கழிப்பறை வசதிகள்

- அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் கட்டப்படும்.
- நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும்.
- முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் அமைக்கப் போதிய நிதி இல்லையெனில், இத்திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும்.
- ஏற்கனவே உள்ள கழிப்பறைகளில் பழுது நீக்கம் / புதுப்பித்தல் / மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளை / வர்ணம் பூசப்படும் பணி மேற்கொள்ளப்படும்.

### இதர பணிகள்

- தேவைகளுக்கேற்ப பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் மிதிவண்டி நிறுத்தம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.
- *பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.** |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# மத்திய அரசுத் திட்டங்கள்

## 18. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### திட்ட துவக்கம்

தமிழகத்தில் முதற்கட்டமாக 2.2.2006 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.4.2008 முதல் தமிழகத்தில் இதர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு நடைபெற்று வருகிறது.

### திட்ட நோக்கம்

- ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.
- ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.
- சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.
- ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.


### பணிகள் தெரிவு செய்யும் முறை

ஒவ்வொரு ஊராட்சியிலும் இத்திட்ட விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிராம சபையில் தீர்மானம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### வேலை கோருவதற்கான தகுதிகள்

- வேலை செய்ய இயலுகின்ற உடல் திறன் கொண்ட அனைவரும் இத்திட்டத்தில் வேலை பெற தகுதியுடையவர்கள்

- அந்த ஊராட்சியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- எந்த ஒரு சாதாரண உடல் உழைப்பிலான வேலையையும் செய்வதற்கு விருப்பமுடையவராக இருக்க வேண்டும்.
- 18 வயது நிரம்பிய ஆண்/பெண் இருபாலரும் வேலை வாய்ப்பு பெற தகுதியுடையவர்.
- வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் மட்டும் அல்லாமல் வேலை கோரும் மற்றவர்களும் வேலை பெற தகுதியானவர்கள்.
- பணிகளில் குறைந்தபட்சம் 33 சதவிகிதம் பெண்கள் பங்கு பெற வாய்ப்பு அளிக்க வேண்டும்.



வேலை அடையாள அட்டை பெறுதல்

## நடைமுறை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 8 மணி நேரம் (உணவு இடைவேளை 1 மணி நேரத்துடன்) மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவு வேலை செய்தால் அரசு நிர்ணயித்த ஊதியம் வழங்கப்படும்..

## திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன்படி, விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
- ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஊதியம் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது. 2011–12ல் ரூ.119/– என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2013 – 14 ஆம் ஆண்டு ரூ.132/– என உயர்த்தப்பட்டது. 2013–14 ஆம் ஆண்டுக்கு ரூ.148/– ஆகவும், 2014–15 ஆம் ஆண்டுக்கு ரூ.167/– ஆகவும், 2015–16 ஆம்

ஆண்டுக்கு ரூ.183/– ஆகவும், 2016–17 ஆம் ஆண்டுக்கு ரூ.203/– எனவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சமஅளவிலான ஊதியம் வழங்கப்படும்.
- வேலையின் போது விபத்து ஏற்பட்டு முழுமையான ஊனமுற்றாலும் அல்லது உயிரிழப்பு ஏற்பட்டாலும் ரூ.25,000/– இழப்பீட்டு தொகையாக வழங்கப்படும்.
- பொதுவாக, பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குக்கு ஊதியம் ஈடு செய்யப்படுகின்றது. 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்குதல் உறுதிசெய்யப்பட வேண்டும்.
- மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள், பெண்களாக இருக்க வேண்டும்.
- வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.
- வேலை நடைபெறும் இடம், கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்க வேண்டும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும். எனினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீக்கு உள்ளாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50 விழுக்காடு வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும்.
- திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசாலும் 25 சதவீதம் மாநில அரசாலும் ஏற்கப்படுகிறது.
- இத்திட்டத்தின் வேலைக்கான ஊதியம் (Labour Component) மற்றும் பொருளுக்கான (Material Component) விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து செயல்பாடுகளிலும் ஒளிவு மறைவின்றி இணையதளத்தில் (www.nrega.nic.in) பதிவுகள் செய்யப்படுகின்றது. எனவே இத்திட்டத்தினைப்

பற்றி பொது மக்கள் அனைவரும் இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதியில்லை.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "சமூகத் தணிக்கைக் குழு" மூலம் மேற்கொள்ளும்.
- குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை "1299" (Toll free Helpline '1299') ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
- இத்திட்டத்தின் அனைத்துக் கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.
- இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும், "தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றம்" என்ற அமைப்பு, தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

### மாற்றுத் திறனாளிகளுக்கான பணிகள்:

### சிறப்பு பணிகள்:

அரசாணையின்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மாற்றுத் திறனாளிகள் மேற்கொள்வதற்கான சிறப்பு பணிகள் கீழ்க்கண்டவாறு:

- பணித்தளத்தில் தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கும் பணியாளர்
- குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பாளர்
- குழந்தைகள் பராமரிப்பு பொறுப்பாளருக்கு உதவியாளர். (ஒவ்வொரு 5 குழந்தைகளுக்கும் ஒரு கூடுதல் உதவியாளர் அமர்த்தலாம்).
- பணித்தளப் பொறுப்பாளர் (worksite supervisor / mate) முன்அளவீட்டினை மேற்கொள்ள உதவுதல் (100 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருப்பின் ஒரு மாற்றுத் திறனாளியினை பணித்தள பொறுப்பாளருக்கு உதவியாளராக அமர்த்தலாம்)

**கீழ்கண்ட சிறு பணிகளுக்கும் மாற்றுத் திறனாளிகளை உட்படுத்தலாம்:**

- பணித்தளத்தில் அகற்றப்பட்ட மரங்களை அப்புறப்படுத்துதல் (இலை, தழைகள் மற்றும் சிறு மரங்கள்)
- ஆழப்படுத்தப்படும் இடங்களில் தண்ணீர் தெளித்தல் (குறிப்பாக கோடை காலங்களில்)
- மண்வெட்டி, கடப்பாறை போன்றவற்றை கொண்டு கரைகளில் கொட்டப்படும் மண்களை சமப்படுத்துதல்
- கரைகளை சமன்படுத்துதல் (benching)
- கரைகளின் சரிவுப்பகுதியினை சீர்செய்தல்.

**மண் தொடர்பான பணிகள்:**

- உடல் உழைப்பினை மேற்கொள்ளத் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளை மண்வேலை தொடர்பான பணிகளான காடுகளை அழித்தல், ஆழப்படுத்துதல், நடுதல், மண்மூடுதல் மற்றும் நீர்பாய்ச்சுதல் போன்றப் பணிகளுக்கு பயன்படுத்தலாம்.

பணித்தளம் / பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அவர்களை மேலே கூறப்பட்டுள்ள சிறப்புப் பணிகளை மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

பணித்தளம் / பணித்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் மட்டுமே மண்தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்தலாம். அப்போது, அவர்கள் 5 அல்லது 10 பேர் கொண்ட குழுவாக பிரிக்கப்பட்டு, சாதாரண தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணி அளவில் 50 சதவீத அளவினை மட்டுமே அவர்கள் மேற்கொள்ள முன் அளவீடு செய்ய வேண்டும்.

## இத்திட்டத்தின்கீழ் எடுத்து கொள்ளக்கூடிய பணிகள்:

**பொதுப் பணிகள்:–**

- புதிய குட்டைகள் அமைத்தல்
- ஏற்கனவே உள்ள குட்டை, குளம், ஊரணி, கோயில் குளங்கள் போன்ற நீர்வள ஆதாரங்களை புனரமைத்தல்.
- நீர்வரத்துக் கால்வாயை தூர்வாருதல்.

- பாசன குளங்களை தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல்.
- புதிய மண்சாலைகளை அமைத்தல்.
- நீர்வள / மண்வள பாதுகாப்பு பணிகள் மற்றும் வெள்ளத் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.
- வறட்சியினைத் தடுக்கும் வகையில் காடு வளர்ப்பு மற்றும் மரங்கள் நட்டு வளர்த்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் திருத்திய அறிவிக்கை–1 பத்தி (4)ல் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட பொது உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.
  - ➢ கிராம ஊராட்சி சேவை மைய கட்டடங்கள்.
  - ➢ வட்டார ஊராட்சி சேவை மைய கட்டடங்கள்.
  - ➢ அங்கன்வாடி மையங்கள்
  - ➢ உணவுதானிய இருப்பு கிட்டங்கி அமைப்புகளை கட்டுதல்
  - ➢ விளையாட்டுத் திடல்களை அமைத்தல்
  - ➢ சுடுகாடுகளை கட்டுதல்
  - ➢ மரங்கள் நடுதல் (வட்டாரம் மற்றும் சாலைகளின் இருமருங்கிலும்)
  - ➢ மண்புழு உர அலகுகள் அமைத்தல்.

**தனிநபர் சொத்து உருவாக்கும் பணிகள்:**

- பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.
- விவசாயிகளின் நிலங்களில் மரங்கள் நடுதல்.
- தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்
- கிணறுகள் அமைத்தல்.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்றவற்றை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருமுகப்படுத்தி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திறன்சாரா பணிகளுக்கான ஊதியக் கூறினை மேற்கொள்ளுதல்.

- தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள் நிலச்சீர்த்திருத்த திட்ட பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட பயனாளிகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், மரக்கன்றுகளை நடுதல், நில மேம்பாட்டு பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.
- கோழிக் கொட்டகை அமைத்தல்,
- ஆட்டுக் கொட்டகை அமைத்தல்,
- மாட்டுக் கொட்டகை அமைத்தல்,
- கால்நடைகளுக்கான தண்ணீர் தொட்டி அமைத்தல்

மத்திய அரசு தெரிவித்துள்ளபடி, தகவல், கல்வி தொடர்பின் (IEC) ஒரு அங்கமாக ஒளி / ஒலி ஊடகங்கள் மற்றும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள், பணி விவரம், பணி செய்ய வேண்டிய அளவு போன்றவை குறித்த தகவல் பலகைகள் ஊராட்சி / குக்கிராமங்கள் / பணித்தளங்களில் நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு தொடர்பு முறைகள் செயல்படுத்தப்படும். இதனால், தொழிலாளர்கள் திட்டம் குறித்த விழிப்புணர்வு, பணி குறித்த கடமைகள் மற்றும் உரிமைகளையும் தெரிந்துகொள்வார்கள்.

## திட்ட செயலாக்கம்

- திட்டப் பணிகளைத் தெரிவு செய்தல், பணிகளை செயல்படுத்துதல் ஆகியவை கிராம ஊராட்சியின் கடமைகளாகும்.
- கிராம ஊராட்சிகளில் தயார் செய்யப்பட்ட பணிகளின் பட்டியலிலிருந்து (Shelf of Projects) முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சிக்குரிய தொழிலாளர்கள் மதிப்பீடு (Labour Budget) அந்த ஊராட்சியின் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- ஒரு குடியிருப்பில் உள்ளோர் பணி செய்ய வேண்டிய இடத்திற்கு எளிதாக வரும் பொருட்டு, அக்கிராம ஊராட்சிகளில் உள்ள குடியிருப்புகள் தொகுதிகளாக (clusters) பிரிக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு குறைந்தபட்சம் ஒரு பணி செய்திட வேண்டும் (1 work per cluster) என்று ஆணையிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஒரு ஊராட்சியில் உள்ள 10 குக்கிராமங்கள், 4 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் குறைந்தபட்சம் 4 பணிகள் அவ்வூராட்சியில் நடைபெறும்.

- ஒரு ஊராட்சியில் எத்தனை தொகுதிகள் உள்ளனவோ அத்தனை பணிகள் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வாரம் :** வியாழன் முதல் புதன் வரை.

| | |
|---|---|
| ➢ வாரத்திற்கான பணி ஆரம்பித்தல் | வியாழன் |
| ➢ தொழிலாளர்களுக்கான தினசரி வருகைப் பட்டியல் இறுதி செய்தல் | புதன் |
| ➢ தொழிலாளர்கள் மேற்கொண்ட பணியினை அளவிடுதல் மற்றும் மேலளவு செய்தல் | வியாழன், வெள்ளி மற்றும் சனி |
| ➢ ஊதிய பட்டியல் தயாரித்தல் | வியாழன், வெள்ளி, சனி, திங்கள், செவ்வாய்மற்றும் புதன் |
| ➢ ஊதியப் பட்டியல் 100 % சரிபார்த்தல் (முதல் கையெழுத்தாளர் – து.வ.வ.அ (மகாதேஊவேஉதி), இரண்டாம் கையெழுத்தாளர் மற்றும் அனுமதிப்பவர் வ.வ.அ.(கி.ஊ.) மற்றும் நிதி பரிமாற்ற ஆணை விடுவித்தல் | வியாழன் மற்றும் வெள்ளி |

## நிதி ஒதுக்கீடு

- மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான நிதி மத்திய அரசிடமிருந்து மாநிலக் கணக்கிற்கு (State exchequer) அனுப்பி வைக்கப்படுகின்றது. அக்கணக்கிலிருந்து அரசாணை மூலமாக இத்தொகை மாநில வேலை உறுதி நிதி கணக்கிற்கு (State Employment Guarantee Fund) மாற்றப்படுகின்றது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் இம்மானியத் தொகை பொருட்கூறுக்கான தேவைக்கேற்ப அந்தந்த மாவட்ட ஊராட்சி முகமைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஏற்ப பொருட்கூறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மூலம் நேரடியாக தொழிலாளர்களின் வங்கிக் கணக்குக்கு ஊதியம் ஈடு செய்யப்படுகின்றது.

## திட்ட செயல்பாடுகள்

### 1) மாநில அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்

**மாநில வேலை உறுதித் திட்டக் குழு**

- மாநில அரசுக்குத் திட்டத்தினை செயல்படுத்திட அறிவுரை வழங்குதல்
- மாநிலத்தில் திட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல்
- மத்தியில் உள்ள வேலை உறுதித் திட்டக் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- ஆண்டறிக்கை தயார் செய்து மாநில சட்டமன்றத்திற்கு அளித்தல்
- திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பாளர் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் / ஆணையர் ஆவார்
- இயக்குநர் / ஆணையர் ஊரக வளர்ச்சித் துறை மாநில வேலை உறுதித் திட்ட நிதிக்கு ஒருங்கிணைப்பாளர் ஆக செயல்படுகிறார்

### 2) மாவட்ட அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்

மாவட்ட ஆட்சித் தலைவர் இத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளராகவும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், இணை திட்ட ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகின்றனர். அவர்களின் பணி பின்வருமாறு.–

- வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து திட்டத்தினை செயல்படுத்திட ஊராட்சிகளில் தயாரிக்கப்பட்ட செயல்திட்டத்தில் இருந்து வேலைகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி, நிதியினை விடுவித்தல்.
- நடைபெறும் பணிகளை கண்காணித்தல்.
- குறைகள் மற்றும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்
- மாநில அரசுக்கு காலமுறையில் அறிக்கை அனுப்புதல்

### 3) வட்டார அளவில் திட்டத்தினை செயல்படுத்துதல்

வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) வட்டார அளவில் திட்ட அலுவலராக பணியாற்றுகிறார். அவரின் பணி பின்வருமாறு :

- ஊராட்சிகளிலிருந்து பணிகளுக்கான செயல்திட்டத்தினை பெற்று ஒருங்கிணைத்து மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைத்தல்
- தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராம சபைகள் நடத்திட நடவடிக்கை எடுத்தல்

- ஊராட்சிகளில் பணிகள் நடைபெறுவதை கண்காணித்தல்
- மாவட்ட நிர்வாகத்திற்கு அறிக்கைகளை அனுப்பி வைத்தல்

## 4) ஊராட்சி அளவில் திட்டத்தினை செயல்படுத்ததுல்

ஊராட்சி மன்றத் தலைவர் திட்ட செயலாக்க அலுவலராக செயல்படுகிறார். அவரின் பணி பின்வருமாறு.–

- முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்து, கிராம சபையின் ஒப்புதல் பெற்று வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல்
- வேலை அடையாள அட்டை கோருபவர்களின் விவரங்களை பதிவு செய்து அவர்களுக்கு அட்டை வழங்குதல்
- வேலை நடைபெறுவதை மேற்பார்வையிடுதல்
- தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல்
- திட்டத்திற்கான பதிவேடுகள் பராமரித்தல்
- வேலை நடைபெறும் இடங்களில் அடிப்படை வசதிகளை செய்து வைத்தல்
- வேலை நடைபெறும் இடங்களில் பணியாளர்களுக்கு காயம் அல்லது விபத்து ஏற்பட்டால் அதற்கான அறிக்கையினை அனுப்பி வைத்தல்

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுகவேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |
| ஊராட்சி அளவில் | : | ஊராட்சி மன்றத் தலைவர் |

## குறை தீர்க்கும் அமைப்பு மற்றும் அணுக வேண்டிய அலுவலர்கள்

| வ. எண். | விபரம் | தொடர்பு அலுவலர் | கால அளவு | மேல் முறையீட்டு அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | வேலை அடையாள அட்டை வேண்டி தனிநபர்கள் பதிவு செய்தல் | ஊராட்சி மன்றத் தலைவர் | 15 நாட்கள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 2. | வேலை வழங்குதல்–வருடத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் | ஊராட்சி மன்றத் தலைவர் | 15 நாட்கள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 3. | பணியிடத்தில் அடிப்படை வசதிகள் (குடிநீர் மற்றும் முதலுதவி) | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 4. | விபத்து அல்லது மரணம் – வேலையின் போது விபத்து ஏற்பட்டு காயமுற்றால் இலவச மருத்துவ உதவி மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் நாட்களுக்கு அரை ஊதியம்– மரணம் ஏற்பட்டால் ரூ.25,000 | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 5. | ஊதியம் வழங்குதல் | ஊராட்சி மன்றத் தலைவர் | ஒவ்வொரு வாரமும் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 6. | தொழிலாளர் குடியிருப்பு பகுதியிலிருந்து 5 கிமீக்கு மேல் பணியிடம் இருந்தால் பயணப்படி (10% ஊதியம்) | ஊராட்சி மன்றத் தலைவர் | ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமை | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 7. | குறை மற்றும் புகார்களை தெரிவிக்க வேண்டிய இலவச தொலைபேசி எண். 1299 | இணை திட்ட ஒருங்கிணைப்பாளர் | அலுவலக நேரம் | மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் |
| 8. | சமூக தணிக்கை மற்றும் சிறப்பு கிராம சபைகள் | ஊராட்சி மன்றத் தலைவர் | வருடத்திற்கு 4 முறை | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |
| 9. | 40 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் 50 சதவிகித வேலைக்கு முழு ஊதியம் வழங்குதல் | ஊராட்சி மன்றத் தலைவர் | – | வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) |

# 19. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

**திட்ட துவக்கம்**

- மத்திய அரசால் முழு சுகாதார திட்டம் 1999ஆம் ஆண்டில் முதலாவதாக அறிமுகப்படுத்தப்பட்டு 2004–ம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் மத்திய அரசால் 1.4.2012 முதல் 'நிர்மல் பாரத் அபியான்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

- தற்போது மத்திய அரசால் 2014ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் முதல், நிர்மல் பாரத் அபியான் திட்டத்தின் தொடர்ச்சி திட்டமாக தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) தொடங்கப்பட்டுள்ளது.

## திட்ட நோக்கம்

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி ஊரகப் பகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்பாடு செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதத்தின் இலக்கினை எய்த ஊரகப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டின் செயல்பாடுகளை விரைவுபடுத்துதல்.

இ) நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் ஊக்குவித்தல்.

ஈ) நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்

உ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்தத் தேவையான இடங்களில் அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

## திட்ட செயலாக்கம்

**தனி நபர் இல்லக் கழிப்பிடங்கள்**

தனிநபர் கழிப்பிட அலகு தொகை ரூ.12,000/–

- மத்திய அரசு நிதி – ரூ. 7,200/–
- மாநில அரசு நிதி – ரூ. 4,800/–

தனிநபர் இல்லக் கழிப்பறைகள், 19.1.2015 லிருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலும் தனியாக அலகுத் தொகை ரூ.12000/–ல் கட்டப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை / உதவித் தொகை பெற தகுதியான ஊரகக் குடும்பங்கள்.**

1. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள்.
2. வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், வீடு உள்ள நிலமற்ற உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்கள்.

**சமூக சுகாதார வளாகங்கள்**

- மொத்த அலகுத் தொகை – ரூ.2,00,000
- மத்திய அரசு நிதி – ரூ.1,20,000 (60 %)
- மாநில அரசு நிதி – ரூ.60,000 (30 %)
- சமூகம்/ஊராட்சியின் பங்குத் தொகை – ரூ.20,000 (10 %)

**திடக் கழிவு மேலாண்மை :**

கிராம ஊராட்சியில் உள்ள குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டபடி (மத்திய அரசு : மாநில அரசு) 60 : 40 என்ற விகிதத்தில் அலகுத்தொகை நிர்ணயிக்கப்படும்.

| | |
|---|---|
| 1 – 150 வீடுகளுக்குள் | ரூ. 7 இலட்சம் |
| 150 – 300 வீடுகளுக்குள் | ரூ.12 இலட்சம் |
| 300 – 500 வீடுகளுக்குள் | ரூ.15 இலட்சம் |
| 500 வீடுகளுக்கு மேல் | ரூ. 20 இலட்சம் |

**திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்**

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) |

# 20. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

## திட்டத்தின் நோக்கம்:

ஊரக குடியிருப்புத் திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் 2016–17–ம் ஆண்டு முதல் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) என சீரமைக்கப்பட்டுள்ளது.

கிராமப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை மற்றும் முற்றிலும் பழுதடைந்த வீடுகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிளுடன் கூடிய தரமான வீடுகள் கட்டித் தருதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## வீடுகள் ஒதுக்கீடு செய்தல்:

- மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர், கிராம ஊராட்சிவாரியாக கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கையை முடிவு செய்வார்.
- சமூக பொருளாதார கணக்கெடுப்புப் பட்டியல் 2011–ஐ பயன்படுத்தி, கிராம சபையின் மூலம் பயனாளிகளைக் கண்டறிந்து முன்னுரிமையின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வீடுகள் ஒதுக்கப்படும்.
- இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.
- அதிக பட்சமாக 40 விழுக்காடு ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினரைச் சார்ந்த நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.
- மொத்த ஒதுக்கீட்டில் 3% வீடுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

## தகுதி வாய்ந்த பயனாளிகள்:

- சமூக பொருளாதார கணக்கெடுப்புப் பட்டியல் 2011–ஐ பயன்படுத்தி கிராம சபையின் மூலம் பயனாளிகளைக் கண்டறிந்து முன்னுரிமை, பயனாளிகளை சேர்த்தல் மற்றும் நீக்குதல் தொடர்பான அளவுருக்களின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

## பணிகளுக்கான உத்தரவு வழங்குதல் :

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களால் நில உரிமை, இடம் ஆகியவை சரிபார்க்கப்பட்டதை உறுதி செய்த பிறகு தகுதியுள்ள பயனாளிகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வேலை உத்திரவினை வழங்குவார்.

பயனாளிகள் வீடுகளைக் கட்டுவதற்கு ஒன்றிய பணி மேற்பார்வையாளர், ஒன்றிய / உதவி பொறியாளர் தேவையான தொழில்நுட்ப உதவிகளை மேற்கொள்வார்கள்.

**நிதி ஆதாரம் :** மத்திய, மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**அலகுத் தொகை – ரூ.1,20,000/–**

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1,20,000/– என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு ரூ.72,000/– (60%) மற்றும் மாநில அரசு ரூ.48,000/–(40%) வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் அனைத்து வீடுகளுக்கும் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக தமிழக அரசால் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து ஒரு பயனாளிக்கு தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படும்.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM(G)) திட்டத்துடன் ஒருங்கிணைந்து கழிப்பறை கட்ட ரூ.12,000/– வழங்கப்படும்.

**சிறப்பம்சங்கள்:**

1. குடும்பத்தலைவியின் பெயரிலோ அல்லது கணவர் மற்றும் மனைவி ஆகியோர் பெயரிலோ வீடு ஒதுக்கீடு செய்யப்படும்.
2. வீட்டின் பரப்பளவு குறைந்தபட்சம் 269 சதுர அடிக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
3. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளே தங்கள் வீட்டைக் கட்டிக் கொள்ளவேண்டும்.
4. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் முழு சுகாதார திட்ட நிதி ஒதுக்கீட்டினை ஒருங்கிணைத்து அனைத்து வீடுகளிலும் ஒரு கழிவறை அமைக்கப்பட வேண்டும்.
5. இத்திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட அனைத்து வீடுகளிலும் திட்டத்தின் பெயர், பயனாளியின் பெயர் மற்றும் வீடு கட்டப்பட்ட ஆண்டு ஆகிய விபரங்கள் தெளிவாகத் தெரியும் வகையில் வண்ணத்தினால் எழுதப்படவேண்டும்.
6. பயனாளிகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளலாம். பயனாளிகளால் கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கதவுகள் மற்றும் ஜன்னல்களை ஏற்பாடு செய்து வழங்கிவிட்டு அதற்கான தொகையினை திட்ட நிதியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி ) |
| ஊராட்சி அளவில் | : | ஊராட்சி மன்றத் தலைவர் |

# 21. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

## நோக்கம்

மாநில மற்றும் மத்திய அரசின் திட்டங்களால் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியினை நிரப்ப நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தேவைக்கேற்ப நிலையான சமுதாயச் சொத்துக்கள் மற்றும் சமுதாயக் கட்டமைப்பு பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் 1993–ம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்டது.

## நிதி ஒதுக்கீடு

ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ரூ.5.00 கோடி நிதியினை மத்திய அரசு ஒதுக்கீடு செய்கிறது.

## மாவட்டங்களை தேர்வு செய்தல்

### அ) மக்களவை உறுப்பினர்

மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை அவரவர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலேயே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### ஆ) மாநிலங்களவை உறுப்பினர்

மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்கலாம்.

### இ) நியமன உறுப்பினர்

நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்தப் பரிந்துரைக்கலாம்.

## ஒருங்கிணைப்பு மாவட்டம் (Nodal District)

நாடாளுமன்ற உறுப்பினர், தனக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மாவட்டத்தினை (Nodal District) தேர்வு செய்து, புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்துக்கு தெரிவிக்கலாம்.

மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதி ஒரு மாவட்டத்திற்கும் மேல் இருப்பின், மக்களவை உறுப்பினர் ஏதேனும் ஒரு மாவட்டத்தினை ஒருங்கிணைப்பு மாவட்டமாக தேர்வு செய்யலாம்.

## அனுமதிக்கப்பட்ட பணிகள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதிக்குட்பட்ட பகுதியில், நிலையான சொத்துக்களை உருவாக்கிடக் கீழ்கண்ட பணிகளை பரிந்துரைக்கலாம்.

- குடிநீர் பணிகள்
- கல்வி
- மக்கள் நலவாழ்வு
- சுகாதாரம்
- சாலைப் பணிகள்

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பணிகள்

- நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினர் வசிக்கும் பகுதிகளுக்கும், 7.5 விழுக்காடு பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் பயன்படுத்த வேண்டும்.
- நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில், பழங்குடியினர் வாழும் பகுதி இல்லையெனில், வரையறுக்கப்பட்ட நிதியினைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதிகளுக்கு பயன்படுத்தலாம்.
- அதேபோல், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதி இல்லையெனில் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

## இதர பணிகளுக்கான ஒதுக்கீடு

- வெள்ளம், புயல், சுனாமி, பூகம்பம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரை செய்யலாம்.
- பேரிடர் பாதிக்கப்படாத பகுதிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக, இத்திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை பரிந்துரை செய்யலாம்.

- பேரிடரின் விளைவு கடுமையாக இருப்பின், பாதிக்கப்பட்ட மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ. 50 இலட்சம் வரை பணிகளுக்காக பரிந்துரை செய்யலாம்.

## செயல்படுத்தும் முறைகள்

- இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அவர்கள் விருப்பத்திற்கிணங்க, வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு, அவர்கள் தொகுதிகளுக்கு செய்ய வேண்டிய பணிகளை மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
- மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படும்.
- நிர்வாக அனுமதி வழங்கிய பின் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் இப்பணிகளை தொடர்புடைய துறையினர் செயல்படுத்துவார்கள்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| தொகுதி அளவில் | : | நாடாளுமன்ற / மக்களவை உறுப்பினர் |
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 22. நபார்டு – ஆர்.ஐ.டி.எப். திட்டம்

**நோக்கம் :**

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்திடவும், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக தரம் உயர்த்திடவும் தமிழக அரசால் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு தேவைப்படும் மொத்த நிதியில் 20% மாநில அரசாலும் மீதமுள்ள 80% நிதி நபார்டு வங்கியின் மூலம் கடனாகவும் பெறப்பட்டு தார்ச் சாலைப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பணிகள் தேர்வு :**

ஒவ்வொரு நிதியாண்டும் மாவட்டத்திற்கு, இத்திட்டத்திற்கென அரசால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப பணிகள் தேர்வு செய்யப்படுகிறது.

**பணிகள் தேர்வு செய்யப்படும் போது கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன :**

- ❖ சாலை இணைப்பு வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு இணைப்பு சாலைகள் அமைத்தல்
- ❖ தேர்வு செய்யப்படும் பணிகளில் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் இயங்கும் சாலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்
- ❖ இதர முக்கியமான விவசாயத்திற்கு பயன்படும் பழுதடைந்த சாலைகள்
- ❖ குறைந்தபட்சம் ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் தேர்வுசெய்யப்படுகிறது
- ❖ தொழில் மற்றும் வணிக மையங்களுக்கு செல்லும் சாலைகள்
- ❖ சுற்றுலாப் பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு செல்லும் சாலைகள்
- ❖ கடந்த ஐந்து ஆண்டுகளில் வேறு எந்த ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை திட்டங்களின் கீழ் தேர்வு செய்யப்படாத சாலைகளை மட்டும் தேர்வு செய்ய வேண்டும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

## 23. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்

### நோக்கம் :

சாலை வசதியில்லாத 500க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் தேவையான சிறுபாலங்கள் மற்றும் வடிகால் வசதியுடன் கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### நிதி ஒதுக்கீடு :

இத்திட்டம் 60 விழுக்காடு மத்திய அரசின் நிதி மற்றும் 40 விழுக்காடு மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

### பணி தேர்வு முறை :

தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமையின் வழிகாட்டுநெறிமுறைகளின்படி இத்திட்டத்தின் கீழ் 500க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களில் உள்ள சாலைகள் தேர்வு செய்யப்படும். மேலும், தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலைத் தொகுப்பில் (Core Network) உள்ள மிகவும் பழுதடைந்த சாலைகளும் தேர்வு செய்யப்படும்.

### செயலாக்கம் :

இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் சாலைகள் அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக செயல்படுத்தப்படுகிறது. நெடுஞ்சாலை துறையின் சாலைகள் சம்மந்தப்பட்ட தோட்டப் பொறியாளர் (தே.நெ) மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

### பயனடைவோர் :

இத்திட்டத்தின் கீழ் இணைப்பு சாலை வசதியில்லாத குக்கிராமங்கள் சாலை வழி பெறும். இதன் மூலம் அப்பகுதி மக்களின் பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரம் மேம்படும்.

### திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 24. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம்

## நோக்கம் :

கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

## நிதி ஒதுக்கீடு :

உள்ளாட்சி அமைப்புகளில் பெறப்படும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்களான கேளிக்கைவரி, முத்திரைத்தாள் கட்டணம் ஆகியவற்றில் இருந்து பெறப்படும் வருவாய் அனைத்தும் மாநில அளவில் ஒருங்கிணைத்து, பின்னர் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இதனால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப் பட்ட வருவாயினை சமச்சீரான முறையிலும், விரைவாகவும், எளிதாகவும், பகிர்ந்தளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பணி தேர்வு முறை :

அடிப்படை கட்டமைப்புக்கு தேவையான சாலைகள், பாலங்கள், குடிநீர் வசதி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்றக் கட்டடங்கள் போன்ற பணிகளை தேர்வு செய்யலாம்.

## செயலாக்கம் :

மாவட்ட அளவில் பணியை தேர்வு செய்து அதன் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் முன்மொழிவு பெறப்பட்டு முதன்மைச் செயலர் தலைமையில் செயல்படும் மாநில குழு ஒப்புதலுக்கு வைக்கப்படும். குழு ஒப்புதல் பெறப்பட்டவுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் அவர்களால் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு செயல்முறை ஆணை வழங்கப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர் இப்பணியை மேற்கொள்ள, மாவட்ட ஊரக வளச்சி முகமை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி அமைப்புகளில் பொருத்தமான அமைப்பு மூலம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்குவார்.

## பணி ஒப்படைப்பு :

மாவட்ட அளவில், வட்டார அளவில் அல்லது கிராம ஊராட்சி அளவில் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படும்.

**பயனடைவோர் :**

இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சாலைகள், பாலங்கள் வடிகால் மற்றும் இதர அடிப்படை வசதிகள் அமைக்கப்படுவதன் மூலம் விவசாய பொருட்கள் கொண்டு செல்லவும், மருத்துவ வசதி பெறவும், மாணவர்கள் கல்வி மேம்படவும் இந்த திட்டம் ஏதுவாக இருக்கும்.

## திட்டத்தில் பயன்பெற மற்றும் திட்டத்தைப் பற்றிய இதர விவரங்களை பெற அணுக வேண்டிய அலுவலர்கள்

| | | |
|---|---|---|
| மாநில அளவில் | : | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15. |
| மாவட்ட அளவில் | : | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| வட்டார அளவில் | : | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |

# 25. குறை தீர்க்கும் வழி முறை

ஊராட்சி நிர்வாகம் மற்றும் திட்ட செயல்பாடு தொடர்பான கருத்துக்கள் மற்றும் குறைகளை, வட்டார வளர்ச்சி அலுவலரிடமோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனரிடமோ தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரிடம், திங்கள்கிழமைதோறும் நடத்தப்படும் குறைகேட்பு கூட்டத்திலோ அல்லது குறிப்பிட்ட தேதிகளில் தெரிவு செய்யப்பட்ட கிராமத்தில் நடத்தப்படும் மக்கள் தொடர்பு முகாம்களிலோ தங்களுடைய கருத்துக்கள் மற்றும் குறைகளை தெரிவிக்கலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஆகியோரின் தொலைபேசி, நிகரி (FAX) எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

## மாவட்ட ஆட்சித் தலைவர்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27237433 | 27237424 | 27238477 | collrkpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27661600 | 27662451 | 27662299 | collrtlr@tn.nic.in |
| 3 | கடலூார் | 04142 | 230999 | 230651 | 230555 | collrcud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 222450 | 223264 | 222470 | collrvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2252345 | 2252501 | 2253034 | collrvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 233333 | 232260 | 233026 | collrtvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2452233 | 2451172 | 2400700 | collrslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 281100 | 281101 | 281106 | collr@nmk.com |
| 9 | தர்மபுரி | 04342 | 230500 | 234444 | 230886 | collrdpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 239500 | 239301 | 239300 | collrkgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2266700 | 2260207 | 2262555 | collrerd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2218811 | 2474722 | 2218822 | collrtup@tn.nic.in |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2301320 | 2301114 | 2301523 | collrcbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2442344 | 2442450 | 2443971 | collrnlg@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 230102 | 230121 | 230857 | collrtnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 252700 | 252500 | 253048 | collrngp@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 223344 | 221000 | 220889 | collrtvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2415358 | 2415031 | 2411929 | collrtry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257555 | 256508 | 257800 | collrkar@tn.nic.in |
| 20 | பெரம்பலூார் | 04328 | 225700 | 224200 | 224455 | collrpmb@tn.nic.in |
| 21 | அரியலூார் | 04329 | 223351 | 228336 | 223351 | collrari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 221663 | 221624 | 221690 | collrpdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2531110 | 2532501 | 2533272 | collrmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 253676 | 255401 | 251466 | collrthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2461199 | 2460080 | 2461082 | collrdgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231220 | 230056 | 230558 | collrrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252525 | 252600 | 252500 | collrvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 241466 | 240391 | 241581 | collrsvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2501222 | 2501032 | 2500224 | collrtnv@tn.nic.in |
| 30 | தூாத்துக்குடி | 0461 | 2340600 | 2340601 | 2340606 | collrtut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279555 | 279090 | 260999 | collrkkm@tn.nic.in |

## திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | அலுவலகம் | | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27238651 | 27237153 | 27238651 | drdakpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27663808 | 27663731 | 27661517 | drdatlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 294278 | 294159 | 294161 | drdacud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 223432 | 222481 | 222481 | drdavpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2253334 | 2253177 | 2258348 | drdavel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 233720 | 2321720 | 232639 | drdatvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2451236 | 2451563 | 2451236 | drdaslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280107 | 280108 | 280107 | drdanmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 230358 | 230089 | 230733 | drdadpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 231800 | 230022 | 239364 | drdakgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2260444 | 2260555 | 2260555 | drdaerd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2218777 | 2218666 | 2218999 | drdatup@gmail.com |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2301547 | 2300756 | 2304445 | drdacbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2451720 | 2442053 | 2443090 | drdangl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 231412 | 231190 | 270065 | drdatnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253080 | 253051 | 253080 | drdang@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 222168 | 227100 | 227100 | drdatvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2410580 | 2414153 | 2410580 | drdatry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257141 | 257601 | 256600 | drdakar@tn.nic.in |
| 20 | பெர"பலூார் | 04328 | 225277 | 277878 | 225377 | drdapmb@tn.nic.in |
| 21 | அரியலூார் | 04329 | 222134 | 211564 | 223351 | drdaari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 232118 | 221766 | 2323118 | drdapdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2532636 | 2530026 | 2531635 | drdamdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 254517 | 254902 | 254902 | drdathn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2460370 | 2461925 | 2460087 | drdatndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231375 | 230630 | 230967 | drdarmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252703 | 252809 | 252703 | drdavnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240388 | 242002 | 244272 | drdasvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2500378 | 2500611 | 2501309 | drdatnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340575 | 2340088 | 2340088 | drdatut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279889 | 279673 | 279889 | drdakkm@tn.nic.in |

## உதவி இயக்குனர், (ஊராட்சிகள்)

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | அலுவலகம் | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|
| | | குறியீடு எண். | தொலைபேசி எண். | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27237175 | adptskpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27660446 | adptstlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 293713 | adptscud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 277167 | adptsvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2553153 | adptsvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 232784 | adptstvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2451632 | adptsslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280152 | adptsnmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 232662 | adptsdpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 232899 | adptskgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2660087 | adptserd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2218234, 2218235 | adptstup@gmail.com |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2303509 | adptscbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2444052 | adptsngl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 236258 | adptstnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253055 | adptsng@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 221359 | adptstvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2464058 | adptstry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 256952 | adptskar@tn.nic.in |
| 20 | பெரம்பலூர் | 04328 | 277705 | adptspmb@tn.nic.in |
| 21 | அரியலூர் | 04329 | 228173 | adptsari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 222171 | adptspdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2533288 | adptsmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 262729 | adptsthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2427392 | adptstndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 230431 | adptsrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252765 | adptsvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240283 | adptssvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2573219 | adptstnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340597 | adptstut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279882 | adptskkm@tn.nic.in |

## மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)

| வ எண். | மாவட்டத்தின் பெயர் | குறியீடு எண். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|
| | | | தொலைபேசி எண். | நிகரி | |
| 1 | காஞ்சிபுரம் | 044 | 27232198,27238838 | 27237789 | papdkpm@tn.nic.in |
| 2 | திருவள்ளூர் | 044 | 27662501 | 27665248 | papdtlr@tn.nic.in |
| 3 | கடலூர் | 04142 | 294773, 294567 | 294056 | papdcud@tn.nic.in |
| 4 | விழுப்புரம் | 04146 | 222664,223603 | 222470 | papdvpm@tn.nic.in |
| 5 | வேலூர் | 0416 | 2252718,2253265 | 2253265 | papdvel@tn.nic.in |
| 6 | திருவண்ணாமலை | 04175 | 232089,233023 | 232089 | papdtvm@tn.nic.in |
| 7 | சேலம் | 0427 | 2450367,2451683 | 2452960 | papdslm@tn.nic.in |
| 8 | நாமக்கல் | 04286 | 280634,281114 | 280634 | papdnmk@tn.nic.in |
| 9 | தர்மபுரி | 04342 | 230001,230561 | 230775 | papddpi@tn.nic.in |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 | 236200,233933 | 236200 | papdkgi@tn.nic.in |
| 11 | ஈரோடு | 0424 | 2268679,2266766 | 2268679 | papderd@tn.nic.in |
| 12 | திருப்பூர் | 0421 | 2218101 | 2218766 | papdtup@gmail.com |
| 13 | கோயம்புத்தூர் | 0422 | 2300712,2303712 | 2303712 | papdcbe@tn.nic.in |
| 14 | உதகமண்டலம் | 0423 | 2443937,2443829 | 2443971 | papdngl@tn.nic.in |
| 15 | தஞ்சாவூர் | 04362 | 237047,238170 | 230857 | papdtnj@tn.nic.in |
| 16 | நாகப்பட்டினம் | 04365 | 253049,253081 | 253048 | papdng@tn.nic.in |
| 17 | திருவாரூர் | 04366 | 221003,221360 | 226045 | papdtvr@tn.nic.in |
| 18 | திருச்சிராபள்ளி | 0431 | 2410876,2412307 | 2411929 | papdtry@tn.nic.in |
| 19 | கரூர் | 04324 | 257700 | 257700 | papdkar@tn.nic.in |
| 20 | பெரம்பலூர் | 04328 | 277901,277956 | 224555 | papdpmb@tn.nic.in |
| 21 | அரியலூர் | 04329 | 221698,226624 | 228903 | papdari@tn.nic.in |
| 22 | புதுக்கோட்டை | 04322 | 221698,226624 | 221658 | papdpdk@tn.nic.in |
| 23 | மதுரை | 0452 | 2531678,2532501 | 2531678 | papdmdu@tn.nic.in |
| 24 | தேனி | 04546 | 254753,250066 | 250962 | papdthn@tn.nic.in |
| 25 | திண்டுக்கல் | 0451 | 2460088,2460082 | 2432133 | papdtndgl@tn.nic.in |
| 26 | இராமநாதபுரம் | 04567 | 231672,230059 | 231672 | papdrmd@tn.nic.in |
| 27 | விருதுநகர் | 04562 | 252013 | 252500 | papdvnr@tn.nic.in |
| 28 | சிவகங்கை | 04575 | 240389,240391 | 241525 | papdsvg@tn.nic.in |
| 29 | திருநெல்வேலி | 0462 | 2501036 | 2501036 | papdtnv@tn.nic.in |
| 30 | தூத்துக்குடி | 0461 | 2340579,2340598 | 2340598 | papdtut@tn.nic.in |
| 31 | கன்னியாகுமரி | 04652 | 279092 | 278019 | papdkkm@tn.nic.in |

## அலுவலக கைபேசி எண்கள்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) | உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7373704201 | 7402606003 | 7402606005 |
| 2 | திருவள்ளூர் | 7373704202 | 7402606110 | 7402606111 |
| 3 | கடலூர் | 7373704203 | 7402606217 | 7402606219 |
| 4 | விழுப்புரம் | 7373704204 | 7402606325 | 7402606326 |
| 5 | வேலூர் | 7373704205 | 7402606575 | 7402606606 |
| 6 | திருவண்ணாமலை | 7373704206 | 7402606609 | 7402606611 |
| 7 | சேலம் | 7373704207 | 7402606744 | 7402606746 |
| 8 | நாமக்கல் | 7373704208 | 7402606852 | 7402606854 |
| 9 | தர்மபுரி | 7373704209 | 7402606939 | 7402606941 |
| 10 | கிருஷ்ணகிரி | 7373704210 | 7402606997 | 7402607002 |
| 11 | ஈரோடு | 7373704211 | 7402607079 | 7402607082 |
| 12 | திருப்பூர் | 7373704212 | 7402607160 | 7402607162 |
| 13 | கோயம்புத்தூர் | 7373704213 | 7402607246 | 7402607248 |
| 14 | உதகமண்டலம் | 7373704231 | 7402608688 | 7402608690 |
| 15 | தஞ்சாவூர் | 7373704214 | 7402607335 | 7402607336 |
| 16 | நாகப்பட்டினம் | 7373704215 | 7402607429 | 7402607431 |
| 17 | திருவாரூர் | 7373704216 | 7402607516 | 7402607518 |
| 18 | திருச்சிராபள்ளி | 7373704217 | 7402607671 | 7402607593 |
| 19 | கரூர் | 7373704218 | 7402607683 | 7402607685 |
| 20 | பெரம்பலூர் | 7373704220 | 7402607783 | 7402607785 |
| 21 | அரியலூர் | 7373704219 | 7402607734 | 7402607736 |
| 22 | புதுக்கோட்டை | 7373704221 | 7402607871 | 7402607859 |
| 23 | மதுரை | 7373704222 | 7402607921 | 7402607923 |
| 24 | தேனி | 7373704223 | 7402608011 | 7402608013 |
| 25 | திண்டுக்கல் | 7373704224 | 7402608078 | 7402608079 |
| 26 | இராமநாதபுரம் | 7373704225 | 7402608156 | 7402608158 |
| 27 | விருதுநகர் | 7373704226 | 7402608263 | 7402608260 |
| 28 | சிவகங்கை | 7373704227 | 7402608350 | 7402608351 |
| 29 | திருநெல்வேலி | 7373704228 | 7402608422 | 7402608423 |
| 30 | தூத்துக்குடி | 7373704229 | 7402608541 | 7402608543 |
| 31 | கன்னியாகுமரி | 7373704230 | 7402608624 | 7402608627 |

**மாநில அளவில் கீழ் குறிப்பிட்ட முகவரியில் அணுகலாம்.**

இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி,
பனகல் கட்டிடம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
தொலைபேசி எண் – 044 – 24338690, 044–24323794
நிகரி எண் – 044 – 24343205
மின்னஞ்சல் முகவரி – drd.tn@nic.in

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

# 26. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, திறன் வளர் பயிற்சிகள் வழங்கி, கூட்டமைப்புகள் மூலம் ஒருங்கிணைத்து, வங்கிகள் மூலம் கடனுதவிகள் பெறச் செய்து, சிறு தொழில்களில் ஈடுபடுத்தி வருவாயைப் பெருக்குவதன் மூலம் வறுமையை குறைத்து சமுதாய மற்றும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக 'தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்' 1983ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மாநிலத்திலுள்ள வறுமையில் வாடும் ஏழை மக்களுக்கு நீடித்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் நோக்கத்துடன் 2012–13 ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்தி வருகிறது.

## 1. சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்களும் அதன் செயல்பாடுகளும்

### அ. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்

- குறைந்தபட்சம் 6 மாத காலம் முடிவுற்ற சுய உதவிக்குழுக்கள்.
- சுய உதவிகுழுக்கள் கீழ்கண்டவற்றை தவறாது கடைபிடித்திருக்க வேண்டும்.
    1. கூட்டங்கள் நடத்துதல்
    2. சேமிப்பு
    3. உள்கடன் கொடுத்தல்
    4. கடன் வசூலித்தல்
    5. பேரேடுகள் பராமரித்தல்
- தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**திட்டத்தின் செயல்பாடு :**

- வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை மேற்கொள்ள வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் அளிக்கப்பட்டு சுய உதவிக்குழுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்படும்.
- சுய உதவிக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடடிவக்கைகள் நிலைத்த தன்மையை அடைய இரண்டாவது மறுகடன் மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு வங்கிகள் மூலமாக வழங்கப்படும்.

**கடன் அளவு :**

வங்கிகள் மூலம் முதல் கடன் இணைப்பாக – ரூ. 50,000/–
இரண்டாவது கடன் இணைப்பாக – ரூ. 1,00,000/–
மூன்றாவது கடன் கடன் இணைப்பாக – ரூ. 2,00,000/–
நான்காவது கடன் இணைப்பாக ரூ. 5,00,000 முதல் ரூ. 10,00,000 வரை வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் அண்டை வீட்டு கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்**

மகளிர் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்தி நிலைத்த தன்மை உடையதாக ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்தல், ஆதார நிதி வழங்குதல் மற்றும் சிறந்த கூட்டமைப்புகளுக்கு விருது வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல், திறன் வளர்த்தல் மற்றும் ஊக்கத்தொகை வழங்குதல்**

**ஊக்கத் தொகை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்**

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள்முடிந்து தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
- பங்கேற்பு, உள்ளாக்கம், நிர்வாகத்திறன், வெளிப்படைத் தன்மை, கடனை திருப்பிச் செலுத்துதல் மற்றும் சமூகநல முயற்சிகள் ஆகிய காரணிகளின் அடிப்படையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்பாக இருக்க வேண்டும்.

**திட்டத்தின் செயல்பாடுகள்**

- சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடித் தீர்வு காண்பதற்கும் ஒரு பங்கேற்பு களமாக கூட்டமைப்புகள்கருதப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் சாதிக்க முடியாத நிகழ்வுகளை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஒட்டுமொத்த ஆற்றலையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்தல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் கூட்டமைப்புகளின் பங்கு பயனுள்ள வகையில் செயலாற்றும்.
- கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சிகள் வழங்கி அவற்றை வழிநடத்தி கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ளும்.

- சுய உதவிக் குழுக்களின் பொதுவான இலட்சியங்களை பிரதிபலிக்கின்ற வலுவான மற்றும் ஒற்றுமையான கூட்டமைப்புகளாக செயல்படும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைந்த, வெளிப்படைத் தன்மை வாய்ந்த மக்கள் இயக்கமாக விளங்கவும், மேலும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்து சட்ட அங்கீகாரம் வழங்கி அவற்றின் நிர்வாக திறன் மற்றும் நிலைத்ததன்மையை மேம்படச் செய்வதே கூட்டமைப்புளை மறுசீரமைப்பதின் தலையாய நோக்கமாகும்.

## சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான தனி நபர் அடையாள அட்டை

அடையாள அட்டைகள் அரசுத்துறைகள், வங்கிகள் மற்றும் இதர நிறுவனங்களை அணுகும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நம்பகத் தன்மையை நல்கும். சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் சலுகைகள் மற்றும் வாய்ப்புகள் வழங்கப்படுவதால் ஒரு தனி நபருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உதவிகள் வழங்குவதை தவிர்க்கவும், ஒருவரே இரட்டிப்பு உறுப்பினராக ஆவதை தடுக்கவும் ஒவ்வொரு தனி உறுப்பினரையும் அடையாளம் கண்டு கொள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும் 60 வட்டாரங்களில் 5,18,213 இலட்சம் மகளிருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழை மக்களைக் கண்டறிந்து சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கான நிலைத்த தன்மையுடைய அமைப்புகளை உருவாக்கி பல்வேறு திறன் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தி, இலாபம் தரக்கூடிய சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் அவர்களது வாழ்வாதார நிலையை உயர்த்தி, வறுமையை ஒழிப்பதே இவ்வியக்கத்தின் குறிக்கோளாகும்.

## திட்டங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 31 ஊரக மாவட்டங்களில் மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட ஏழை மக்களின் குடும்பங்களை 5 முதல் 7 ஆண்டுகளில் வறுமையிலிருந்து விடுபடச் செய்யும் நோக்கில் வலுவான மற்றும் உயிரோட்டமான மக்கள் அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை பெற வழிவகை செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

## திட்டத்தின் உத்திகள்

இவ்வியக்கத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் திட்ட செயலாக்க உத்திகள் வகுக்கப்பட்டுள்ளது.

- சமூக உள்ளடக்கம் மற்றும் பொது சமூக ஒருங்கிணைத்தல்
- ஏழைகளுக்கு நிறுவன வசதிகள் செய்தல்
- நிதி உள்ளடக்கம்
- பொருளாதார உள்ளடக்கம் – ஏழைகளுக்கு நீடித்த வாழ்வாதாரத்தினை ஏற்படுத்துதல்
- திறமைகளை வளர்த்தல் மற்றும் வேலை வாய்ப்பு பெற்றுத் தருதல்
- இறுதி கட்ட சேவை வழங்குதல் (சமூக வல்லுநர்கள் மற்றும் சமூக முனைவோர் மூலமாக)
- அரசின் இதர திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியாதாரங்களை ஏற்படுத்தித் தருதல்

## திட்டத்தின் செயல்பாடு

- மத்திய அரசு திட்டமான ஊரக வாழ்வாதார இயக்கம் தமிழக அரசு மூலமாக ஏழாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 2012–13ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட 60 வட்டாரங்களில் உள்ள 2,323 கிராம ஊராட்சிகளிலும் 2,388 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- 2013–14ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட 110 வட்டாரங்களில் உள்ள 3,458 கிராம ஊராட்சிகளிலும் 3,538 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- 95 வட்டாரங்களில் உள்ள 2,451 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் விரிவுப்படுத்தப்பட்டது. இதுவரை 1,530 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளில் மக்கள் நிலை ஆய்வுப் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- இதுவரை மொத்தம் 7,436 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமூக தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 3. திறன் பயிற்சி

### அ. தொழில் மற்றும் பணியமர்வு பயிற்சி

தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திறன் பயிற்சி திட்டமானது, தமிழ்நாட்டில் 2012–13 ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கம் கிராமப்புற இளைஞர்களின்

தேவைகளின் அடிப்படையில் அவர்களின் குடும்ப வருமானத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் அவரவர் தொழில் விருப்பங்களுக்கு ஏற்றவாறு கற்றுதரப்படுகிறது. இத்திட்டமானது, கிராமப்புற ஏழை இளைஞர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பயிற்சியளித்து, தனியார் நிறுவனங்களில் பணியமர்த்துவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், அவர்களுக்குத் தொடர்ந்து ஆலோசனை மற்றும் கண்காணிப்பு ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன.

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட NCVT / SSC பாடத்திட்டங்களின்படி பயிற்சி நடத்தும் பயிற்சி நிறுவனங்களை அங்கீகரித்தும், சான்றளித்தும், குறைந்தபட்சம் 75 விழுக்காடு பயிற்சியாளர்களை, குறைந்தது ரூ. 6,000/– மாத வருமானத்தில் பணியில் அமர்த்தல் போன்ற பல்வேறு தொடர் முயற்சிகளின் மூலம் தரமான பயிற்சி அளிக்க அரசு நடிவடிக்கை எடுத்து வருகின்றது.

**திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- 3 முதல் 12 மாதங்கள் வரை வேலைவாய்ப்புடன் கூடிய சந்தை சார்ந்த தொழில் திறன் பயிற்சிகள்.
- தொழில்திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்திரவாதம் (பயிற்சி பெற்றவர்களில் குறைந்தது 75% விழுக்காடு)

**திட்டத்தில் பயன்பெறுபவர்கள் விழுக்காடு**

- 33 விழுக்காடு பெண்கள்
- 50 விழுக்காடு அட்டவணை மற்றும் பழங்குடியின வகுப்பினர்
- 15 விழுக்காடு சிறுபான்மையினர்
- 3 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள்

**பயிற்சியில் சேருவதற்கான தகுதிகள்**

- 18 வயதிலிருந்து 35 வயது வரை உள்ள இளைஞர்கள் (ஆண், பெண் இருபாலருக்கும்)
- பெண்களுக்கு வயது வரம்பு 40 ஆக தளர்த்தப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள், நலிவடைந்தோர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு 45 ஆகும்.

**திட்ட செயல்பாடு**

- தீன் தயாள் உபாதியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் நிரந்தர பதிவு எண் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் தகுதிகளை ஆய்வு செய்து தலைமை அலுவலகத்தின் வாயிலாக பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் இடப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாநில அளவிலான குழு முடிவு செய்வதன் அடிப்படையில் நிறுவனங்களின் செயல்பாடுகளை அறிந்து அதற்கேற்றாற்போல் பயிற்சி நிறுவனங்களுக்கு இலக்கு அளிக்கப்படுகிறது.

- ஒவ்வொரு பயிற்சிக்கான திறன் இடைவெளி ஆய்வின் அடிப்படையில் பயிற்சி அளிக்கும் நிறுவனம் பயிற்சி அளிப்பதோடு, அதற்கான வேலை வாய்ப்பிற்கான சாத்தியக்கூறுகள் தற்போது மற்றும் வருங்காலத்தில் இருப்பதையும் அந்நிறுவனம் அளிக்கும்.
- தரமான பாடத்திட்டம் SSC மற்றும் NCVT ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட அடிப்படை பாடத்திட்டத்தினை அனைத்து பயிற்சிகளுக்கும் பின்பற்றுவதுடன் மென்திறன் பயிற்சிகளான அடிப்படை ஆங்கிலம், அடிப்படை கணினி அறிவு ஆகியவற்றையும் கொண்டதாகவும் இருக்கும்.
- 40 விழுக்காடு விளக்கப் பாடமும், 60 விழுக்காடு செய்முறைப் பயிற்சியும் ஒவ்வொரு பயிற்சியின் பாடத்திட்டமும் கொண்டிருப்பதுடன் பயிற்சியின் போது பாடத்திட்ட குறிப்புகளும் அளிக்கப்படுகின்றது.
- பயிற்சிக்குப்பின் பணியமர்த்தும் இடத்திலேயே, வேலையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது.
- DGET மற்றும் NSDC ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பயிற்சி முடித்தப்பின் பயிற்சியாளர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரமான சான்றிதழ்கள் ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.
- பயிற்சி நிறுவனங்கள், பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தது ஓராண்டு காலம் வரை ஆலோசனை வழங்கி, அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வழிவகை செய்யப்படுகின்றது.
- பயிற்சி காலத்தில், பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு சீருடை வழங்கப்படுகிறது.

**உணவு மற்றும் போக்குவரத்துக் கட்டணம்**

உறைவிடம் தங்கி பயிலாத ஒவ்வொரு இளைஞர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ.100 என்ற வீதத்தில் அவர்கள் வருகைதந்த காலத்திற்கு கணக்கிடப்பட்டு உணவு மற்றும் போக்குவரத்துக் கட்டணத்திற்காக அளிக்கப்படுகிறது.

**பணியமர்வுக்கு பின் அளிக்கப்படும் ஊதியம்**

வறுமைக் கோட்டிற்குகீழ் / மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு திறன் பயிற்சி பெற்று பணியில் அமர்த்தப்பட்ட இளைஞர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு மாதம் ரூ.1000 ஊக்கத் தொகையாக அளிக்கப்படுகிறது. இத்தொகையானது ஊதியம் பெற்றதற்கான வருமானச்சான்று இரசீதுகளை சமர்ப்பித்த பிறகு அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

அந்தந்த மாவட்டத்தில் பணியில் இருந்தால் 2 மாதங்களுக்கும், மாநில அளவில் பணியிலிருந்தால் 3 மாதங்களுக்கும், மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்தில் பணியிலிருந்தால் 6 மாதங்களுக்கும் இவ்வூக்கத் தொகை வழங்கப்படும்.

**திறன் பயிற்சி சாதனைகள் (2012–2016)**

2012 முதல் 2016 ஆண்டு வரை, 40,029 இளைஞர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறை வணிகம் மற்றும் அழகுகலை உள்ளிட்ட பல்வேறு திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## ஆ. தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்

சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு, அவர்கள் ஆர்வம் காட்டும் தொழில்களில் சிறந்த நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சுய தொழில் பயிற்சி அளிப்பதில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் சுயமாகவோ அல்லது குழுவாகவோ சுய தொழில் மேற்கொள்ள ஆர்வமுள்ள மகளிருக்கு இப்பயிற்சி வழங்கப்படும்.

### பயன்களை பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்

- 35 வயதிற்கு மேற்பட்ட கிராமப்புறம் மற்றும் நகர்புற மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

### திட்டத்தின் செயல்பாடு

- மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், பேக்கேஜிங், பெயரிடுதல், விலை நிர்ணயித்தல் மற்றும் சான்றளித்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி இப்பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பாடப்பிரிவுகள் தேர்வினை மாவட்ட அளவிலான குழு தீர்மானிக்கும்.
- பாடபிரிவுகளுக்கான பயிற்சி காலம் 45 நாட்கள் முதல் முன்று மாதங்கள் வரை.
- பயிற்சி முடித்தவர்களுக்கு தொழில் தொடங்க வங்கிக்கடன் பெற வழிவகை செய்யப்படும்.

## வழங்கப்படும் உதவிதொகை

- உதவித்தொகையாக உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 50/- வழங்கப்படும்.

### தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககம்.

### இ. ஒரு கிராமம் ஒரு உற்பத்தி பொருள்

### இ. ஒரு கிராமம் ஒரு உற்பத்தி பொருள்

“ஒரு கிராமம் - ஒரு உற்பத்தி பொருள்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபட்டுள்ள குழுக்களை கண்டறிந்து அவைகளை ஊக்குவித்து ஒரு கிராம அளவில் அல்லது சில கிராமங்களை இணைத்து விவசாயம் சாராத தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு தொழில் தொகுப்புகள் உருவாக்கப்படும். அவற்றிற்கு அனைத்து வகையான நிதிவசதி ஏற்படுத்தி தந்து , உற்பத்தியை பெருக்கி, சந்தை வாய்ப்புகளை உருவாக்கி தரப்படும்.

2012-13 - 2014-15 ஆம் ஆண்டிற்கு நாளது தேதி வரை 919 ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4. திறன் வளர்ப்பு பயிற்சிகள்

#### நிர்வாகிகளுக்கான நிர்வாகத் திறன் பயிற்சி

களபயணத்துடன் மூன்று நாட்கள் உண்டு, உறைவிட பயிற்சி பயணப்படியுடன் வழங்கப்படுகிறது.

#### நிதி மேலாண்மைப் பயிற்சி

தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்காளருக்கு மூன்று நாட்கள் உண்டு, உறைவிட பயிற்சியாக பயணப்படியுடன் வழங்கப்டுகிறது.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் தொண்டு நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பயிற்சி

தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் கணக்காளருக்கு மூன்று நாட்கள்உண்டு, உறைவிட பயிற்சியாக பயணப்படியுடன் வழங்கப்படுகிறது.

### செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி

இப்பயிற்சியானது ஊராட்சி அளவிலேயே மூன்று நாட்கள் வழங்கப்படும். ஊக்குநர்

மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சிகளில் வழங்கப்படுவது போல் உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ. 67.50 செலவிடப்படும்.

## குடியிருப்பு மன்ற நிர்வாகிகளுக்கான பயிற்சி

இரண்டு நாட்கள் பயிற்சி ஊராட்சி அளவிலேயே வழங்கப்படும். ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சிகளில் வழங்கப்படுவது போல் உறுப்பினர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.67.50 செலவிடப்படும்.

## வழங்கப்படும் உதவிதொகை

தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊக்க நிதியாக வழங்கப்படும்.

### தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 5. வேலைவாய்ப்பு முகாமின் மூலம் நேரடி வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்பு முகாமானது வேலை கொடுப்பவர் மற்றும் வேலை தேடுபவர்களை ஒரு குடையின் கீழ் இணைக்க தமிழக அரசால் துவக்கப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த முன் முயற்சியாகும். இம்முகாம்களில் இளைஞர்களின் தகுதி மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு பணியமர்வு செய்யப்படுகின்றனர்.

இம்முகாம்களுக்கு மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பின்வருமாறு :

- மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு நாள், இடம் மற்றும் தேதி பற்றி ஊரக பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- புகழ் பெற்ற தொழில் மற்றும் உற்பத்தி நிறுவனங்களை இம்முகாம்களில் பங்கேற்க அழைப்புவிடுத்தல்.
- முறையான பதிவு, கலந்தாய்வு மற்றும் நிறுவனங்களின் தேவைக்கேற்ப இளைஞர்களை தேர்வு செய்தல்.

### தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 6. அம்மா கைபேசி திட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் மாபெரும் சக்தியாய் உருவெடுத்து, இன்று 6.08 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் 92 லட்சம் உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டமைப்பின் கீழ் தோராயமாக 20 முதல் 25 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் உள்ளனர். சுய உதவிக் குழுவில் ஊக்குநராக செயல்பட்ட அனுபவமிக்க உறுப்பினர்களே சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்களாக தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் புதிய சுய உதவிக் குழுக்களை அமைப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் துணை புரிந்து வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாங்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தாதொகை செலுத்துதல் , சேமிப்பு, அவர்களுக்குள் கொடுத்து கொள்ளும் உட்கடன் விவரம், கடனைமீளச் செலுத்துதல் போன்ற நடைமுறைகளுக்கு பல்வேறு பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது. விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்யவும் அவர்களின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும், தமிழ்மொழியில் சிறப்பு மென்பொருள் ஒன்று உருவாக்கி கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

## 7. MGNREGS – PROJECT LIFE வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம்

## (தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டம்)

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளின் குடும்பங்களை சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இப்பயிற்சியானது மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் பயன் பெற்ற பயனாளி குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது ஆகும்.

இத்திட்டமானது 2015–16 முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்ட குடும்பங்களின் நிரந்தர வருவாய் உறுதி செய்யப்பட உள்ளது.

## இத்திட்டத்தின் முக்கியஅம்சங்கள்

- இத்திட்டமானது மக்கள் பங்கேற்பு முறையிலான திட்ட உருவாக்க செயலாக்கம் (IPPE -II) பற்றிய நடைமுறைப்படி மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்ட பணியில் ஈடுபட்ட பணியாளர்களில் இருந்து பட்டியல் தயாரித்து, அதன் மூலம் இத்திட்டத்திற்கான பயனாளிகளை ஊரகப்பகுதி வாரியாக கண்டறிந்துள்ளது.

- தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் PROJECT LIFE திட்டத்தினை மாவட்ட திட்ட இயக்க மேலாண்மை அலகுகளுடன் ஒருங்கிணைப்பு செய்து செயல்படுத்துகிறது.

- **இப்பயிற்சியின் மூன்று முக்கிய கூறுகள்:** ஊதியம் சார்ந்த வேலை வாய்ப்பு பயிற்சிகள், சுய வேலை வாய்ப்பு திறன் பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்.

- இத்திட்டமானது ஏற்கனவே நடைமுறையில் உள்ள திறன் மற்றும் பணியமர்வு பயிற்சியின் DDU-GKY திட்டத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

- பயிற்சி நிறுவனங்களான (PIAs) திட்டசெயலாக்க நிறுவனங்களை அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் திறனை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.

- பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் ஊக்க தொகையாக அவர்களுடைய உணவு மற்றும் போக்குவரத்து செலவாக கொடுக்கப்படும்.

- பல்வேறு வகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள்: ஓட்டுநர் பயிற்சி, தகவல்தொழில்நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறைவணிகம் மற்றும் அழகுகலை.

- சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நடத்தப்படும் ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) மூலமாக வழங்கப்படுகிறது,

2015–16 ம் வருடத்திற்கான மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்ட தொடர் வேலை வாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தை (**MGNREGS – Project LIFE**) செயல்படுத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நலமேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ்கண்டவாறு மூன்று வகையான திட்டக் கூறுகளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | திட்டகூறுகள் |
|---|---|
| 1 | ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள் |
| 2 | சுய வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள் |
| 3 | வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள் |

## 8. சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம் :

மத்திய அரசு வட்டிமானிய திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் ரூ. 3 இலட்சம் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு மட்டும் வட்டிமானியமாக தமிழ்நாட்டில் தர்மபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் தவிர, இதர 27 மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் தருமபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் மத்திய அரசால் நேரிடையாக செயல்படுத்தப்படுகிறது.

## 9. விருதுகள்

### சிறந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

சிறப்பாக செயல்படும் 10 சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ. 1.00 இலட்சம் வீதம் மாநில அளவிலான விருதுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் சிறந்த மூன்று சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ. 25,000 வீதம் விருதுகள் வழங்கப்படுகிறது.

சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 3.00 இலட்சம் வீதம் மாநில அளவிலான விருதுகள் வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் சிறந்த ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு தலா ரூ. 1.00 இலட்சம் விருதுகள் வழங்கப்படுகிறது.

### சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதுகள்

சுய உதவிக்குழு இயக்கத்தினை வலுப்படுத்தும் பொருட்டு, முக்கியத் திட்டப் பங்காளர்களாக செயல்படுபவர்களை ஊக்குவிக்கும் வகையில், பல விருதுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து உறுப்பினர்களையும் எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்கும் 30 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.50,000/- பரிசுடன் கூடிய விருது வழங்கப்பட்டு வருகிறது. சமூக அநீதிகளுக்கு எதிராக அசாதாரணமான துணிவுடன் போராடும், சுய உதவிக்குழுக்களை கௌரவிக்கும் வகையில் 5 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் மூலம் சுய உதவிக் குழுக்கள் சமூக நீதிக் காவலர்களாக, சமூக அநீதிகளை எதிர்த்து போராட எழுச்சி பெறுவர்.

### சிறப்பாகச் செயல்படும் வங்கியாளர்களுக்கான விருது :

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கியாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த கீழ்காணும் வங்கி /வங்கி கிளைகளுக்கு விருதுகள் வழங்கப்படுகிறது.

| வ.எண் | விருதுகளின் பெயர் | பரிசுவிபரம் |
|---|---|---|
| அ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட வங்கிக்கான விருது | முதல் மூன்று வங்கிகளுக்கு- நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| ஆ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட– சுய உதவிக் குழு / பெண்களுக்கான தனி வங்கிக்கிளைக்கான விருது | முதல்பரிசு– ரூ.1 லட்சம்<br>இரண்டாவதுபரிசு– ரூ.75,000/- |
| இ) | மாநிலஅளவில் சிறப்பாக செயல்பட்ட–பிற வங்கிக் கிளைக்கான விருது | முதல்பரிசு– ரூ.1 லட்சம்<br>இரண்டாவதுபரிசு– ரூ.75,000/-<br>மூன்றாம் பரிசு- ரூ.50,000/- |
| ஈ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக்கான விருது | ஒரு நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் |
| உ) | மாவட்ட அளவில் சிறந்த வங்கிக் கிளைக்கான விருது | முதல்பரிசு ரூ.15,000/–<br>இரண்டாவதுபரிசு- ரூ,10,000/–<br>மூன்றாவதுபரிசு- ரூ.5,000/– |

## 10. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனைகளும்

- தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

### திட்டத்தின் செயல்பாடு

- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் வங்கிகளிலிருந்து கடன் பெற்று உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கப்படுகின்றன.

### வழங்கப்படும் கடன் தொகை

- கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, கடன் தேவை மற்றும் நுண்கடன் திட்டத்தின் அடிப்படையில் பெருங்கடனுக்கான தொகை நிர்ணயம் செய்யப்படும்.
- பொதுவாக பெருங்கடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள குழுக்களின் எண்ணிக்கை அடிப்படையில் ரூ.20 இலட்சம் முதல்

ரூ. 1 கோடி வரை பெறப்பட்டு, உறுப்பினர் குழுக்களுக்கு அவர்களது தேவையின் அடிப்படையில் தொழில் துவங்கிடவும் மற்றும் தொழில் மேம்பாட்டுக்கும் கடனாக வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 11. சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்தும் திட்டங்கள்

**1. கண்காட்சிகள்:**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விளம்பரப்படுத்தும் பொருட்டும் சந்தைப்படுத்தும் விதமாகவும் தேசிய அளவில் நடைபெறும் கண்காட்சிகளில் பங்கு பெறுவதோடு மட்டுமல்லாமல் மாநில அளவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வருடத்திற்கு மூன்று முறை விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இவ்வாறு கடந்த 2015-16ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கண்காட்சியில் 559 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ரூ. 238.73 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

**2. கல்லூரி சந்தை:**

மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் கல்லூரிகளில் விழாக்கள் மற்றும் முக்கிய பொது நிகழ்ச்சிகள் நடைபெறும் போது, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக வளாகங்களில் கல்லூரி சந்தைகள் (College Bazaars) நடத்தப்படுகின்றன. கடந்த 2015-16 ஆம் ஆண்டில் மாநில அளவில் 122 கல்லூரிகளில் நடத்தப்பட்ட இக்கண்காட்சிகளில் 2677 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு ரூ.203.00 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

**3. அம்மா சிமெண்ட் :**

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள "**அம்மா சிமெண்ட்**" திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சி துறை, மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை கொண்டு சிமெண்ட் மூட்டைகளை விற்பனை செய்ய அரசாணை எண்.188/MID–2 தொழில் துறை நாள்.11.12.2014 யின் வழியே ஆணை பிறப்பிக்கப்பட்டு சென்னையை தவிர அனைத்து மாவட்டங்களிலும் அம்மா சிமெண்ட் இது வரையிலும் **4,31,751** மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டு ஊக்கத் தொகை ரூ. **7,96,089/–** மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 4. நடமாடும் மதி விற்பனை அங்காடி:

அரசாணை எண்.117 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்.05.09.2013ன் வழியே, மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு மக்கள் அதிகமாக கூடும் இடம் மற்றும் சுற்றுலாத் தலங்களில் 100 மதி நடமாடும் விற்பனை அங்காடிகள் மாவட்டந்தோறும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டின்படி அமைக்கப்பட்டு இது வரையிலும் ரூ.59.47 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 12. கலாச்சாரப் போட்டிகள்

சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமை, திறன் மற்றும் கூட்டு முயற்சியை வெளிக்கொணரும் நோக்கத்தில் வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு பண்பாட்டு கலாச்சார போட்டிகள் நடத்தப்படுகின்றன. இக்கலாச்சாரப் போட்டிகள் சுய உதவிக் குழு மகளிரிடையே பெற்றுள்ள ஆதரவையும் வரவேற்பையும் மற்றும் அதன் பயன்களையும் கருத்தில் கொண்டு இப்போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. 2016–17 ஆம் ஆண்டில் இத்தகைய கலாச்சார போட்டிகளுடன் விளையாட்டு போட்டிகளும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களிடையே நடத்தப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 13. ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான புதிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனத்தின் மூலம் ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் உள்ள மகளிரை குடும்ப தலைவராகக் கொண்ட ஏழை குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு, வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி/ வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான பயிற்சி மற்றும் நிதி உதவி ஆகியவற்றுடன் கூடிய சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் 2015-16ம் ஆண்டு தொடங்கி வரும் 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தில் சுய வேலைவாய்ப்பு மேற்கொள்ள தகுதியான ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி மற்றும் சுயதொழில் பயிற்சிகள் வழங்குவதோடு மட்டுமல்லாது, பொருளாதார வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பயனாளிகளுக்காக வங்கி/கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் /ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் வட்டி மானியத்துடன் கூடிய கடன் வசதிகள் ஏற்படுத்தி தருவதன் மூலமும், ஒரே தொழிலில் ஈடுபடும் ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட

குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகளை வைத்து சிறப்பு வாழ்வாதார குழுக்கள் அமைத்து, குழுவிற்கு ரூ.1.00 லட்சம் வரை நிதியுதவி அளித்து, தேவையின் அடிப்படையில் பொதுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மற்றும் சமூக பொருளாதாரம் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படுகிறது.

**தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்**

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),

மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## 14. மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா (MKSP) மகளிர்விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்

இந்தியா உள்ளிட்ட வளர்ந்து வரும் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரத்திற்கு கிராமத்தின் மகளிர் மட்டுமே ஒரு உந்து சக்தியாக விளங்குகிறார்கள். இந்தியாவின் மொத்த வருமானத்தின் 16% வருமானம் வழங்குகின்ற துறை வேளாண்மை துறையாகும். இதில் மகளிரின் பங்கு ஒரு மகத்தான பணியாக மாறி வருகிறது. இந்த வேளாண் துறை மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பங்கு சுமார் 80% என்றால் இதன் முக்கியத்துவம் விளங்கும்.

வேளாண் துறையில் கூலி தொழிலாளர்களாக இருக்கும் மகளிரின் விழுக்காடு 33% ஆகும். தங்கள் பண்ணையிலேயே வேளாண் வேலை செய்யும் மகளிர் 48%. NSSO அறிக்கையின் படி 18% மகளிர் குடும்ப தலைமையில் வேளாண்மை நடைபெற்று வருகிறது, ஒரு விதத்தில் கிட்டத்தட்ட எல்லா மகளிரும் விவசாயிகள் என்றே கருத வேண்டும். அவர்கள் பெரும்பாலும் நில உடமை சொந்தகாரர்களாக இருப்பதில்லை. எனவே அரசின் பல்வேறு திட்டங்கள் அவர்களை எளிதில் சென்றடைய முடியவில்லை.

மகளிரின் இந்த நிலையை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தவும் மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா என்ற திட்டம் 2010–11 ஆம் ஆண்டில் மத்திய அரசால் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைகூறாக தொடங்கப்பட்டுள்ளது.

### மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனாவின் முக்கிய குறிக்கோள்கள் :

- வேளாண்மையில் மகளிரை திறம்பட ஈடுபடுத்துதல்.
- வேளாண்மையின் மூலம் மகளிருக்கு நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்குதல்.
- கிராமத்திலேயே கிடைக்கும் இடுபொருள்களை மேலாண்மை செய்து உற்பத்திக்கு உபயோகப்படுத்துதல்.
- அரசு திட்டங்கள் மற்றும் இடுபொருள் சேவைகள் எளிதில் கிடைக்க வழி செய்தல்.
- குடும்பத்திற்கு உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பினை உறுதி செய்தல்.

மேற்கண்ட நோக்கங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2015–16 முதல், மூன்று ஆண்டுகளுக்கு மத்திய மாநில அரசுகளின் உதவியுடன் விழுப்புரம் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் மொத்தம் 16,800 மகளிர் விவசாயிகள் பயனடைவர்.

## திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- 12 முதல் 18 நபர் கொண்ட மகளிர் விவசாய குழுக்களை உருவாக்குதல் (Women farmers organization). இதன் மூலம் மொத்தம் 934 விவசாய குழுக்கள் உருவாக்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக நல பயனாளிகளுக்கு திட்டத்தில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப உத்திகளில் பயிற்சி அளித்தல். மேலும் விதைத்தல் முதல் அறுவடை வரை நீடித்த நிலையான வேளாண் செயல்பாடுகள் மூலம் உற்பத்தியை பெருக்க பயிற்சி அளிக்கப்படும்.
- இந்த திட்ட காலத்தில் சுமார் 8300 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி (SRI) முறையை அறிமுகப்படுத்துதல்.
- நிலையான வேளாண் நடைமுறைகள் – கிராமத்தில் கிடைக்கும் இடுபொருட்கள் உதவியுடன் இரசாயன உரம் தவிர்த்து, செலவினங்களை கட்டுப்படுத்தி, உற்பத்தியை பெருக்குவது மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் வருமானம் தலா ரூ.37500/– அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மண்வள வேளாண்மை – மண்புழு உரம், பஞ்சகாவ்வியம், இலை உரம், பயிறு வகை சாகுபடி ஆகியவற்றை கடைபிடித்தல்.
- ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுபாட்டு மேலாண்மை.
- கூடுதல் வாழ்வாதாரமாக கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு ஊக்குவித்தல்,
- விளைபொருட்களின் உற்பத்தி குழுக்களை ஏற்படுத்துதல்.
- இடுபொருள் வங்கிகள் (விதை, உயிரிய உரங்கள், பணி சிரமம் குறைக்கும் கருவிகள்) நிர்மானித்தல்.
- பயனாளிகளுக்கு சுழல் நிதி அளித்தல்.
- மூன்றாவது பயிராக பயிறு வகை பயிர்களை பயிரிடுதல் மூலம் மண்ணில் நைட்ரஜன் விகிதத்தை மேம்படுத்துதல்.

இந்த மகிளா கிசான் சஷக்திகரன் பரியோஜனா திட்டம் நடைமுறைப்படுத்ததப்படும்

மாவட்டங்கள், கிராமங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொண்டு நிறுவனங்கள் | மாவட்டம் | வட்டாரம் | மொத்த கிராமங்கள் |
|---|---|---|---|
| ரிவார்ட் சொசைட்டி | விழுப்புரம் | கோலியனூர், திருவெண்ணெய் நல்லூர் | 20 |
| பல்மைரா | விழுப்புரம் | வானூர், மரக்காணம் | 20 |
| கல்வி கேந்திரா | விழுப்புரம் | செஞ்சி விக்கிரவாண்டி | 40 |
| நேஷனல் அக்ரோ பவுண்டேசன் | திருவள்ளூர் | கும்மிடிப்பூண்டி, சோழவரம் | 26 |
| நேஷனல் அக்ரோ பவுண்டேசன | காஞ்சிபுரம் | திருபோரூர், திருகழுக்குன்றம் | 60 |
| | **மொத்தம்** | | **166** |

### தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்

திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்),
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்.

## மகளிர் திட்டம் மாவட்ட செயலாக்க அலகின் முகவரிகள்

| அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| அரியலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், அரியலூர் | 04329-228505 |
| சென்னை | திட்ட இயக்குநர்,<br>மகளிர் திட்டம்,<br>100,அண்ணாசாலை, கிண்டி.<br>சென்னை – 600 032 | 044-2235063 |
| கோயம்புத்தூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>கோயம்புத்தூர் -641 008 | 0422 -2301855 |
| கடலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>பீச்ரோடு ,வண்ணார பாளையம்,<br>இராதாநகர், கடலூர்-607 001 | 04142 -294143 |
| தருமபுரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், இரண்டாவது மாடி,<br>டிடிடிசி கட்டிடம்.தருமபுரி -636 705. | 04342 – 233298 |
| திண்டுக்கல் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம். தரைத்தளம்,<br>திண்டுக்கல் - 624 005. | 0451 - 2460050 |
| ஈரோடு | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>முதல் மாடி, பூமாலை வணிக வளாகம்,<br>பெருந்துறை ரோடு, குமலன் குட்டை.<br>ஈரோடு – 638 011. | 0424- 2257087 |

| அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| காஞ்சிபுரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>காஞ்சிபுரம் - **631 502.** | 044 – 27236348 |
| கன்னியாகுமரி. | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>நாகர்கோவில், பூமாலை வணிக வளாகம்,<br>வடச்சேரி,கன்னியாகுமரி – **629 001.** | 04652 -272275 |
| கரூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>இரண்டாவது மாடி,கரூர்**-639 005.** | 04324 -257377 |
| கிருஷ்ணகிரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.எண். 106 & 107,<br>இரண்டாவது மாடிகிருஷ்ணகிரி- **635 001** | 04343 –235267 |
| மதுரை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>புது நத்தம் ரோடு, மதுரை – **625 014** | 4365 – 253061 |
| நாகப்பட்டினம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்.<br>மூன்றாவாது மாடி, நாகப்பட்டினம் - **611 003.** | 04286 - 281131 |
| நீலகிரி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>அலெக்சாண்டர் காலேஜ்,<br>பேங்க் லைன்,<br>வண்டிச்சோலை, நீலகிரி **-643 001.** | 0423 -2444430/35 |

| அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| சிவகங்கை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>44/69, எழில் காம்ப்ளக்ஸ், தரை தளம்,<br>மேலூர் தெரு, சிவகங்கை-630 561. | 04575-240962 |
| நாமக்கல் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>இரண்டாவது மாடி, நாமக்கல் - 637 003. | 04286 - 281131 |
| திருநெல்வேலி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>கொக்கிர குளம், பழைய ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருநெல்வேலி-627 009 | 0462-2500302 |
| பெரம்பலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்<br>பெரம்பலூர் - 621 212. | 04328 - 225362 |
| திருவண்ணாமலை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>எண் 4/15, 7வது தெரு காந்தி நகர்,<br>திருவண்ணாமலை – 606 601. | 04175 227476 |
| புதுக்கோட்டை | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம்/ஊரக வாழ்வாதார இயக்கம்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>52, எழில் நகர், புதுக்கோட்டை – 622 005. | 04322 – 230950 |
| தஞ்சாவூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>எண் 223 இரண்டாவது மாடி,<br>புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருச்சி ரோடு, தஞ்சாவூர்-613 007. | 04362 -277907 |

| அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| இராமநாதபுரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>1/314, பாரதி நகர்,வெளிப்பட்டினம் (அஞ்சல்)<br>இராமநாதபுரம்-623 535. | 04567-231341 |
| தேனி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>அறை எண். 71, 4 வது மாடி,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>தேனி- 625 531. | 04546-255203 |
| திருச்சி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருச்சி-620 001. | 0431-2412726 |
| சேலம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>207, 2வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக<br>வளாகம், சேலம் - 636 001. | 0427241552 |
| திருவள்ளூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>1வது மாடி, மாவட்ட ஆட்சியர் அலுவலக<br>வளாகம், திருவள்ளூர்-602 001. | 044 -27664528 |
| திருவாரூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>2வது மாடி, புதிய ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருவாரூர் - 610 101. | 04366-221031 |
| விழுப்புரம் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>TAHDCO பில்டிங், நெ. 62/56-ஏ சென்னை<br>நெடுஞ்சாலை, விழுப்புரம்-605 602. | 04146-223736 |

| அலுவலகம் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| தூத்துக்குடி | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>2வது மாடி, ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>கோரம்பாளையம், தூத்துக்குடி- 101. | 0461-2341282 |
| விருதுநகர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>விருதுநகர். | 04562-252036 |
| வேலூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>பூமாலை வணிக வளாகம்,<br>கற்பகம் சூப்பர் மார்க்கெட் எதிரில்,<br>அண்ணாசாலை, வேலூர்-632 001. | 0416-2215765 |
| திருப்பூர் | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட இயக்க மேலாண்மை அலகு<br>மகளிர் திட்டம் / மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருப்பூர். | 0421-2218770 |

# புது வாழ்வு திட்டம்

## தமிழ்நாடு வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றல் படுத்தும் திட்டம்

# புதுவாழ்வு திட்டம்

## திட்ட செயலாக்கப் பகுதிகள்



# 27. தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்
## தமிழ்நாடு வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றல் படுத்தும் திட்டம்

**தமிழ்நாடு பற்றி ஒரு தகவல்**

| | | |
|---|---|---|
| • மொத்த பரப்பளவு | : | 1,30,058 ச.கி.மீ |
| • மாவட்டங்கள் | : | 32 |
| • வருவாய் பிரிவு | : | 76 |
| • தாலுக்கா | : | 215 |
| • ஊராட்சிகள் | : | 17,099 |
| **கிராமப்புறம்** | | |
| • மாவட்டங்கள் | : | 31 |
| • வட்டாரங்கள் | : | 385 |
| • கிராம பஞ்சாயத்துக்கள் | : | 12,524 |
| • குடியிருப்புகள் | : | 79,394 |
| **நகர்ப்புறம்** | | |
| • மாநகராட்சிகள் | : | 10 |
| • நகராட்சிகள் | : | 152 |
| • நகர பஞ்சாயத்துக்கள் | : | 529 |
| **மக்கள் தொகை** | : | 7,21,38,958 |
| • ஆண்கள் | : | 3,61,58,871 (50.12%) |
| • பெண்கள் | : | 3,59,80,087 (49.88%) |
| • கிராமப்புற மக்கள் தொகை | : | 3,71,89,229 (51.55%) |
| • ஆண்கள் | : | 1,86,63,701 (50.18%) |

| | | |
|---|---|---|
| • பெண்கள் | : | 1,85,25,528 (49.82%) |
| • நகர்ப்புற மக்கள் தொகை | : | 3,49,49,729 (48.45%) |
| • ஆண்கள் | : | 1,74,95,170 (50.05%) |
| • பெண்கள் | : | 1,74,54,559 (49.94%) |

(2011 கணக்கெடுப்புப்படி)

| | | |
|---|---|---|
| **மொத்த குழந்தைகள்** | : | 6,894,821 |
| • ஆண் (0–6 வயது) | : | 3,542,351 (51.37%) |
| • பெண் (0–6 வயது) | : | 3,352,470 (48.62%) |
| **படிப்பறிவு சதவிகிதம்** | : | 80.33% |
| • ஆண் | : | 86.81% |
| • பெண் | : | 73.86% |
| **படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை** | : | 52,413,116 |
| • ஆண் | : | 28,314,595 |
| • பெண் | : | 24,098,521 |
| **பாலின விகிதம்** | : | 995 |
| **குழந்தைகள் பாலின விகிதம்** | : | 946 |

(2011 கணக்கெடுப்புப்படி)

## தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்

தமிழ்நாடு அரசு ஏழை எளிய மக்களின் வறுமையை போக்கும் நோக்கில் உலக வங்கி நிதி உதவியுடன் 2005–ம் ஆண்டு முதல் புதுவாழ்வுத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் உள்ள 120 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 4,174 கிராம ஊராட்சிகளில் உள்ள 9.8 லட்சம் குடும்பங்களை இலக்காக கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் குறிக்கோள் ஏழை எளியோர், மாற்றுத்திறன் படைத்தோர், நலிவுற்றோர் ஆற்றல் பெறுதல் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை எட்டிடுதல் ஆகும். மக்கள் அமைப்புகளை உருவாக்கி, அவற்றை வலுப்படுத்துவதுடன், ஏழை எளியோரின் திறன் மற்றும் ஆற்றலை மேம்படுத்தி, திட்ட செயல்பாடுகளில் வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்து, மக்களே அவர்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பேற்கும் வகையில் இத்திட்டம் செயல்படுகிறது. இதன் மூலம் ஊரக பகுதிகளில் உள்ள பெண்கள், சமூகத்தில் முக்கிய முடிவுகள் எடுத்தல் மற்றும் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு முழுமையாக குரல் கொடுக்க வழி ஏற்பட்டுள்ளது.

இத்திட்டமானது இலக்கு மக்களை ஆற்றல் படுத்தவும் மற்றும் அவர்களின் வாழ்வதாரத்தை உயர்த்துவதையும் முக்கிய நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

- இலக்கு மக்களைக் கொண்ட கிராமப்புற அமைப்புகள்/குழுக்களை உருவாக்குதல், வலுப்படுத்துதல் மற்றும் உறுதுணையாக இருத்தல்.
- இலக்கு மக்களின் திறன்களை மேம்படுத்துதல் (மகளிர் மற்றும் நலிவுற்றோர்)
- தேவையின் அடிப்படையில் இலக்கு மக்களின் வாழ்வாதாரத்திற்கான முதலீடுகளை ஏற்படுத்துதல்

**திட்டத்தின் நோக்கம்**

வலுவான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய அடித்தள மக்கள் அமைப்புகள் மூலம் மிகவும் ஏழை மற்றும் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை தரம் மேம்பாடு அடைந்து, சமூக பொருளாதார பங்களிப்பு மற்றும் ஆற்றல் பெற்றிடச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

ஏழை மக்களின் திறன் வளர்ப்பிற்கும் அவர்கள் நிலையான வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் நிதி பெறுவதற்கும் திட்டம் தனி கவனம் செலுத்துகிறது. மக்களை முன்நிறுத்தி அவர்களே தங்களின் முன்னேற்றத்திற்கு பொறுப்பாகும் அணுகுமுறையை பின்பற்றுகிறது. அனைத்து தரப்பினர்களுக்கும் பொருந்தும் உயிர் மூச்சு கொள்கைகள், சமுதாய பொறுப்புணர்ச்சி மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.

## திட்ட செயலாக்கப் பகுதி விவரம்

| பிரிவுகள் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | தொடங்கப்பட்ட மாதம் |
|---|---|---|---|
| **திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள்** | | | |
| I | 15 | 578 | நவம்பர் 2005 |
| II | 15 | 584 | ஏப்ரல் 2007 |
| III | 20 | 635 | பிப்ரவரி 2008 |
| IV | 20 | 712 | பிப்ரவரி 2009 |
| **மொத்தம்** | **70** | **2509** | |
| **திட்டம் நடைமுறையில் உள்ள இரண்டாவது கட்ட பகுதிகள்** | | | |
| I | 26 | 874 | ஜூன் 2011 |
| II | 24 | 791 | அக்டோபர் 2011 |
| **மொத்தம்** | **50** | **1665** | |
| **மொத்தம்** | **120** | **4174** | |

## நிதி விவரம்

(ரூபாய் கோடியில்)

| விவரம் | திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள் | புதிதாக மேற்கொள்ளப் பட உள்ள பகுதிகள் | மொத்த நிதி விவரம் |
|---|---|---|---|
| 1. கிராம அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல் | 117.00 | 88.50 | 205.50 |
| 2. அ. கிராம நிதி | 520.00 | 794.50 | 1314.50 |
| ஆ. கிராமப்புற வாழ்வாதார அமைப்புகளுக்கு மாவட்ட மற்றும் மாநிலஅளவிலான உதவிகள் | 31.50 | 22.50 | 54.00 |
| இ. திட்ட பராமரிப்பு செலவினங்கள் | 48.60 | 44.50 | 93.10 |
| **மொத்தம்** | **717.10** | **950.00** | **1667.10** |

## முக்கிய நிகழ்வுகள்

| | | முதல் கட்டம் | இரண்டாம் கட்டம் |
|---|---|---|---|
| கடன் ஒப்புதல் | : | 12.07.2005 | 18.11.2010 |
| கையொப்பமானது | : | 14.09.2005 | 23.12.2010 |
| நடைமுறைபடுத்தப்பட்டது | : | 24.10.2005 | 22.02.2011 |
| முடிவு பெறும் தேதி | : | 30.09.2014 | 30.09.2014 |

புது வாழ்வு திட்டம் சமூக நலத்துறையிலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு மாற்றப்பட்ட தேதி : 20.07.2006

## செயற்பாட்டு அமைப்பு முறை

மாநில புது வாழ்வு சங்கம் தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம், 1975 ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநில சங்க வடிவமைப்புகள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது :

1. **பொதுக்குழு:** அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களின் தலைமையின் கீழ் பொதுக் குழு செயல்படும்.
2. **செயற்குழு:**அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களின் தலைமையின் கீழ் செயற்குழு செயல்படும்.
3. மாநில திட்ட அலகானது பலதரப்பட்ட வல்லுநர்களை கொண்டு திட்டஇயக்குநர் தலைமையில் செயல்படும். இத்திட்ட இயக்குநரே மாநில சங்கத்தின் உறுப்பினரும் ஆவார்.
4. மாநில அளவிலான சங்கம் திட்ட வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புப் பணியை மேற்கொள்கிறது.

## மாவட்ட அளவிலான சங்கம்

மாவட்ட புது வாழ்வு சங்கம் தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம், 1975 ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட சங்க வடிவமைப்புகள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது

1. **பொதுக்குழு:** மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் பொதுக் குழு செயல்படும்.
2. **செயற்குழு:** மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின் கீழ் செயற்குழு செயல்படும்.
3. மாவட்ட திட்ட அலகானது மாவட்ட திட்ட மேலாளர் தலைமையில் செயல்படும். இத்திட்ட மேலாளரே மாவட்ட சங்கத்தின் உறுப்பினரும் ஆவார்.

**மாவட்ட அளவிலான சங்கம் மாவட்ட அளவில் திட்ட செயலாக்கங்களை ஒருங்கிணைத்து வழிகாட்டும்.**


## பகுதி அளவிலான திட்ட ஒருங்கிணைப்பு அணி

1. மாவட்ட அளவில் உள்ள ஒவ்வொரு வட்டாரமும் பகுதிகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் 10–15 கிராம ஊராட்சிகளும் உள்ளடங்கும். (2000–2500 இலக்கு மக்கள் குடும்பங்கள்).

2. ஒவ்வொரு பகுதியிலும் 5 நபர்களைக் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு அணி அமைக்கப்படும். அவ்வணியின் கடமையானது கிராமத்திலுள்ள இலக்கு மக்கள் கொண்ட அமைப்புகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக செயல்படுதல் ஆகும்.

திட்ட ஒருங்கிணைப்பு அணி கிராமங்களில் உள்ள இலக்கு மக்களை நிறுவனங்களாக உருவாக்கி, அவர்களை வளர்த்து மற்றும் உதவி செய்யும் பொறுப்பினை பெற்றுள்ளது.

## திட்ட செயலாக்கத்திற்குரிய நிறுவன அமைப்புகள்



## திட்ட செயலாக்க அணுகுமுறை

இத்திட்டம் ஏழை மக்களின் தேவைகளை அறிந்து மக்களை முன்நிறுத்தி தங்களின் முன்னேற்றத்திற்கு தாங்களே திட்டமிட்டு செயலாற்றும் அணுகுமுறையை பின்பற்றி, முனைப்பான செயல்பாடுகளால் நிலையான வாழ்வாதாரம் மூலம் வருவாய் பெருகிட வழிவகை செய்கிறது.

மக்களின் பங்கேற்புடன் இலக்கு மக்களைக் கண்டறிதல் ஒரு சிறந்த முறையாக உருவெடுத்துள்ளது. சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை மதிப்பீட்டின் அடிப்படையில் இலக்கு மக்களை கண்டறியும் முறையை பயன்படுத்தி வறுமையை அகற்றும் பல்வேறு யுக்திகளை கையாண்டு வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொணர்வதற்கும், திட்ட பயன்கள் நேரடியாக சென்றடைவதற்கும் பின்வரும் மக்கள் அமைப்புகள் உருவாக்கப்படுகிறது.

## கிராம அளவில்

**கிராம வறுமை ஒழிப்பு சங்கம்** என்பது இலக்கு மக்களைக் கொண்டு திட்ட செயலாக்கப் பொறுப்புடன் தன்னிச்சையாக செயல்படக் கூடிய மக்கள் நிறுவனம் ஆகும்.

**சமூக தணிக்கைக் குழு**வானது திட்ட உயிர் மூச்சுக் கொள்கைகள் திறம்பட செயல்படுத்தப்படும் முறையினை கண்காணிக்கும் அமைப்பு ஆகும்.

**சுய உதவிக் குழு** என்பது கிராம அளவில் செயல்படும் ஏழை மக்களின் ஓர் அடிப்படை நிறுவனம் ஆகும். இவை ஏழைகளை ஒருங்கிணைத்தல், ஆற்றல் அளித்தல் மற்றும் கூட்டுத் திறன் வளர்த்தல் பணியினை செய்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விடுபட்ட இலக்கு மக்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குழுக்களும் மற்றும் மலை வாழ் மக்களுக்கான சுய உதவிக் குழுக்களும் உருவாக்கப்படுகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**கள் என்பது ஒரு சிறந்த நிதி நிறுவனமாக செயலாற்றுகிறது. இக் கூட்டமைப்பின் மூலம் ஏழை எளிய குடும்பங்களுக்கு நிதி மற்றும் நிதி சாராத சேவைகள் நன்முறையில், குறைந்த நிர்வாக செலவில் சிறப்பான முறையில் சென்றடைகிறது.

**ஒத்த தொழிற் குழுக்கள் என்பது** ஒரு பகுதியில் ஒரே வகை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழு உருவாக்கப்படுகிறது. இக்குழுவின் மூலம் உறுப்பினர்கள் அனைவருக்கும் தேவைபடும் பொதுவான வசதிகளான கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதல் இலகுவாக பெற்றிட உதவிடும்.

தரமதிப்பீடு செய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுய உதவிக்குழுக்களில் இருந்து ஒத்த தொழில் குழு உறுப்பினர்கள் வரலாம். இவர்களில் 70 சதவீதம் பேர் கட்டாயமாக இலக்கு மக்களாக இருக்க வேண்டும்.

## ஒத்த தொழில் கூட்டமைப்பு

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகிற ஒத்த தொழில் குழுக்களை பகுதி / வட்டார அளவில் ஒருங்கிணைத்து ஒத்த தொழில் கூட்டமைப்பு சங்கம் உருவாக்கப்படுகிறது. உற்பத்தி

பொருட்களின் மதிப்பு கூட்டுதல், உயர் சந்தைப்படுத்துதல் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் மூலம் நிலைத்து நீடித்திட தேவையான வசதிகளை பெற்று தர இக்கூட்டமைப்பு செயல்படுகிறது. 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு வங்கி இணைப்பு மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு ஆகியவை இக்கூட்டமைப்பின் நிதி ஆதாரமாகும்.

## சமூக அளவிலான அமைப்புகளின் திறன் வளர்ப்பு பயிற்சி

அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

- திட்டக் கையேடு புத்தகம் – I
- திட்டக் கையேடு புத்தகம் – II
- ஆளுமை (ம) பொறுப்புணர்வு

## சமூக தணிக்கைக் குழு

- திட்டக் கையேடு புத்தகம் – I & II
- ஆளுமை (ம) பொறுப்புணர்வு
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கொள்கை

## சுய உதவிக் குழு

- உறுப்பினர் பயிற்சி கையேடு I, II & III
- நிர்வாகப் பயிற்சி
- புத்தக பராமரிப்புப் பயிற்சி

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

- ஆளுமை
- நிதி மேலாண்மை
- புத்தக பராமரிப்பு

## ஒத்த தொழில் குழு (அ) பொருளாதார தொழில் கூட்டமைப்பு

- ஆளுமை
- நிதி மேலாண்மை
- புத்தக பராமரிப்பு
- தொழில் திட்டம்

## தற்காப்பு பயிற்சி

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த பெண்களுக்கு மக்கள் கற்றல் மையம் வாயிலாக தற்காப்பு கலை பயிற்சி தரப்படுகிறது. இதன்

மூலம் தங்களுக்கு நேரிடும் வன்கொடுமைகள் தொடர்பான சவால்களை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள ஏதுவாக ஒரு சிறப்பு முயற்சியை இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது.

## சமூக அளவிலான அமைப்புகளின் திறன் வளர்ப்பு பயிற்சி

அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் மேற்கண்ட பயிற்சி பெற தகுதியுடையவர்.

## இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி

இத்திட்டம் இளைஞர்களை வளர்ச்சி பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தவும், அவர்களின் திறன்களை வளர்த்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு முயற்சிகள் எடுத்து வருகிறது. இத்திட்டம் வேலை வாய்ப்பு முகாம்கள் மூலமாக வேலைவாய்ப்பு பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு ஒரு பாலமாக அமைகிறது.

18 முதல் 35 வயதுடைய ஏழைக் குடும்பங்களில் உள்ள இளைஞர்கள் இப்பயிற்சி பெற தகுதியுடையவர்.

## மாற்றுத் திறனாளிகள் அணுகுமுறை

இத்திட்டத்தில் 40 சதவிகிதம் அல்லது அதற்கு அதிகமான திறன் குறைபாடு உள்ளவர்கள் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பேசும்–கேட்கும்– பார்க்கும் திறன் குறைவு, கை கால் திறன் பாதிப்பு, மனநலம் பாதிப்பு, தொழுநோயினால் ஏற்பட்ட பாதிப்பு, மனநோய், மூளை முடக்கு வாதம், மனநலம் மற்றும் உடல்நலம் குறைபாடு உள்ளவர்களை மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறிந்து உதவிகள் செய்யப்படுகிறது.

## புதுவாழ்வு மனநல திட்டம்

மனநலம் குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாண ஜப்பான் அரசின் கொள்கை மற்றும் மனித வள மேம்பாடு நிதி உதவியுடன், புதுவாழ்வு மனநல திட்டம் முன்னோடி திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. 15 வட்டாரங்களில் 578 கிராம ஊராட்சிகளில் உள்ள 609 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக மக்கள் பங்கேற்பு அணுகு முறையின் அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மனநலம் காத்திடும் நல்வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் மனநலம் பேணுவதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சை பெறுதல் ஆகியவற்றிற்கு தேவையான முனைப்பான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்களாக ஆக்கப்படுகின்றனர். இவர்கள் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்ட செயல்பாடுகள் வாயிலாக பயன் பெற்று தங்களது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள முடிகிறது.

### மனநலம் பாதிக்கப்பட்டோர்களுக்கான உதவிகள்

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள் | 2,736 |
| 2 | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | 2,679 |
| 3 | மருத்துவ உதவி பெற்றவர்கள் | 2,558 |
| 4 | வாழ்வாதார உதவி பெற்றவர்கள் | 2,460 |
| 5 | மருத்துவமனை சிகிச்சை பெற்றவர்கள் | 440 |
| | **மொத்த நிதி செலவினம்** | **ரூ.13.89கோடி** |

## நலிவுற்றோருக்கான சிறப்பு அணுகுமுறை

பல்வேறு இடர்களுக்கு உட்பட்டு மீளமுடியாத தன்மைக்கு உட்பட்டவர்கள் நலிவுற்றோர் என அழைக்கப்படுவர். நலிவுற்றோர்களான விதவைப் பெண்கள், தனிமைப்படுத்தப்பட்ட அல்லது விலக்கப்பட்ட பெண்கள், அனாதைகள், முதியோர்கள், பாரம்பரிய முறையில் பின்தங்கிய சமூகத்தினர், முற்றிய நோயால் பாதிக்கப்பட்டவர்கள், திருநங்கைகள், எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களை மையப்படுத்தி இத்திட்டம் செயல்படுகிறது.

இத்திட்டம் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரின் மேம்பாட்டிற்காக வாழ்வாதார உதவிகள், மறுவாழ்வு பயிற்சிகள் வழங்குவதோடு மட்டும் அல்லாமல் அவர்களுக்கு பிற சமூக நல திட்டங்களையும் பெற்று தருகிறது.

### பழங்குடியினர் – கிராம வறுமை ஒழிப்பு சங்கம்

புது வாழ்வு திட்டத்தில் 291 பழங்குடியினர் ஊராட்சிகளில் 347 பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் அமைக்கப்பட்டு செயல்ப்பட்டு வருகிறது.

### மக்கள் கற்றல் மையம் (மகமை)

கிராம அளவிலுள்ள முதற்கட்ட சமூக அமைப்புகளை வலுப்படுத்துவதற்காகவும் திட்ட இலக்குகளை செயல்படுத்த தேவையான திறன் வளர்ப்பு பயிற்சிகள் அளிப்பதற்காகவும் முதற்கட்ட அமைப்புகளை உறுப்பினர்களாகக் கொண்டு இரண்டாம் கட்ட சமூக அமைப்பான மக்கள் கற்றல் மையம் (மகமை) 16 மாவட்டங்களில் மாவட்ட மற்றும் வட்டார அளவில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

### கிராம கற்றல் மையம்

இணைய தள இணைப்பு மற்றும் இணைய படக் கருவி மூலம் தொலை தொடர்பு செய்தி பரிமாற்றம், கல்வி குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் மற்றும்

பல்வேறு அரசு சார்ந்த சேவைகளுக்கான படிவங்கள் போன்ற வசதிகளை கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களில் ஏற்படுத்தி இச்சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாக செயல்பட்டு வருகின்றன. சந்தை நிலவரம், தொலை மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு செய்தி மற்றும் உயர்கல்வி சம்பந்தமான தகவல்கள் பெறுவதற்கான தகவல் மையங்களாக இவை திகழ்கின்றன. திட்ட பகுதிகளில் 4,174 கிராம கற்றல் மையங்கள் அரசு மின் சேவை மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

## திட்ட சாதனைகள் 31.05.2016 வரை

### சமூக அளவிலானஅமைப்புகள் அமைத்தல்

- அமைக்கப்பட்ட வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை : 4,465
- அமைக்கப்பட்ட சமூக தணிக்கை குழுக்களின் எண்ணிக்கை : 4,465
- அமைக்கப்பட்ட சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை
    - மகளிர்: 22,861
    - மாற்று திறனாளிகள்:13,286
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் இணைக்கப்பட் ட பழைய குழுக்கள் : 71,289
- மறு சீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை : 4,464
- அமைக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை : 5,869
- ஒத்த தொழில் கூட்டமைப்புகளின் எண்ணிக்கை : 15

### இளைஞர்கள் வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி

- 4,33,361 இளைஞர்கள் பயிற்சி முடித்துள்ளனர்
- 3,69,367 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது
- 559 பயிற்சி நிறுவனங்கள் பயிற்சி அளிக்கின்றன.

### மாற்றுத் திறனாளிகள்

- 1,69,048 மாற்றுத் திறனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்
- 1,33,895 மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்களில் இணைக்கப்பட்டுள்ளனர்
- 1,35,626 மாற்றுத் திறனாளிகள் திட்ட நிதி உதவி பெற்றுள்ளனர்

- 1,61,026 மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது
- பராமரிப்புத் தொகை பெற்ற மாற்றுத் திறனாளிகள் – 19,901
- உதவி உபகரணங்கள் பெற்ற மாற்று திறனாளிகள் – 35,704 தொகை – ரூ.13.21 கோடி
- பயிற்சி பெற்ற, சேவையிலுள்ள சமூக மாற்று திறனாளிகளுக்கான ஊக்குநர் – 4,116

## நலிவுற்றோர்

- கண்டறியப்பட்ட நலிவுற்றோர் – 1,57,078
- திட்ட நிதியுதவி பெற்ற நலிவுற்றோர்–1,29,841
- உதவித்தொகை பெற்ற மாற்று திறனாளிகள் (ம) நலிவுற்றோர்–1,60,523
- பயிற்சி பெற்ற சேவையிலுள்ள பழங்குடியினர் சமூக ஊக்குநர்–108

## மக்கள் கற்றல் மையம்

- 16 மாவட்டங்களில் மகமை அமைக்கப்பட்டுள்ளது.
- திட்டத்திலிருந்து மேம்பாட்டு நிதியாக ரூ.7.00 கோடி வழங்கப்பட்டது.
- 8,453 பயிற்சி பெற்ற சேவையிலுள்ள சமூக பயிற்றுநர்கள் 15 திட்டத் துறை செயல்பாடு வாரியாக செயல்பட்டு வருகின்றனர்.

## கீழ்கண்ட துறைகளுடன் இணைந்து செயல்படுதல்

- கால்நடைத்துறை (பால் உற்பத்தி)
- ஆதி திராவிடர் நலத்துறை (தாட்கோ கடன் மற்றும் சாதி சான்றிதழ்)
- வருவாய்த்துறை (உதவித்தொகை)
- வனம் மற்றும் சுற்றுச்சூழல்
- ஆணையரகம், மாநில மாற்றுத்திறனாளிகள் (தேசிய அடையாள அட்டை)
- சமூக நலத்துறை (பராமரிப்பு தொகை)
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம் (இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி)

- அனைவருக்கும் கல்வி இயக்கம்
- தேசிய அளவிலான ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான நிறுவனம் (உபகரணங்கள்)
- மாவட்ட மனநலம் பாதிகப்பட்டோர் திட்டம்
- மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (தொகுப்பு வீடு)
- தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் (சுய உதவிக் குழுக்களுக்காக)
- விவசாயத்துறை (தீவனப் பயிர்)

**வறுமைக் குறைப்பில் உள்ள அடிப்படை வழிமுறைகள்**



**முகவரி :**

| | |
|---|---|
| மாநில அலுவலகம்<br>(சென்னை) | திட்ட இயக்குநர்,<br>தமிழ்நாடு மாநில புதுவாழ்வு சங்கம்,<br>அன்னை தெரசா மகளிர் வளாகம்<br>வள்ளுவர்கோட்டம்<br>சென்னை–600 034.<br>தொலைபேசி : 044 - 43443200<br>நிகரி : 044 – 2817 3717<br>மின்னஞ்சல் : pvpstate@gmail.com<br>tneprp@yahoogroups.com<br>www.pudhuvaazhvu.org |
| அரியலூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>2ம் தளம், மாவட்டஆட்சியர் அலுவலகம்,<br>ஜெயங்கொண்டம் ரோடு,<br>அரியலூர்–621 704கைபேசி : 74026 10700<br>தொலைபேசி : 04329–228044<br>மின்னஞ்சல் : aripvds@yahoo.in |
| கோயம்புத்தூர் (திருப்பூர் உட்பட) | மாவட்ட திட்ட மேலாளர்,<br>3ம் தளம், CDCC பேங்க், SBI சாலை<br>(ரயில்வே ஸ்டேஷன் ரோடு எதிரில்), கோயம்புத்தூர்–18<br>கைபேசி : 94884 41232.<br>தொலைபேசி : 0422 – 2300633<br>மின்னஞ்சல் : cbdpvds@yahoo.in |
| கடலூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>2, மகாலட்சுமி ராயல் நகர் ஆண்கள் அரசினர்<br>மேல்நிலை பள்ளி (எதிரில்) விருத்தாசலம்–606 001.<br>கைபேசி : 94420 88161<br>தொலைபேசி : 04143 – 238811 / 263210<br>மின்னஞ்சல் : cdlpvds@yahoo.in |
| தர்மபுரி | மாவட்ட திட்ட மேலாளர்,<br>DDDC வளாகம், புது பில்டிங்,<br>மாவட்டஆட்சியர் அலுவலகம், தர்மபுரி–636 705.<br>கைபேசி :74027 03150<br>தொலைபேசி : 04342 – 232544<br>மின்னஞ்சல் : dpipvds@yahoo.in |

| | |
|---|---|
| திண்டுக்கல் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>பூமாலை வணிக வளாகம்,<br>கோபால சமுத்திரம் கிழக்கு கரை<br>அரசு மருத்துவமனை பின்புரம் திண்டுக்கல்–624 001.<br>கைபேசி : 94890 52662<br>தொலைபேசி : 0451 – 62431337<br>மின்னஞ்சல் : dglpvds@yahoo.in |
| காஞ்சிபுரம் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>பழைய எண்B.36, புது எண்.27, அழகேசன் நகர்,<br>செங்கல்பட்டு–603 001,காஞ்சிபுரம் மாவட்டம்<br>தொலைபேசி : 27429835 / 37<br>கைபேசி : 97509 75352<br>மின்னஞ்சல் : kpmpvds@yahoo.in |
| கரூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>11611, பாலா ஏர்காடு , முதல் தளம் தண்தோணிமலை,<br>திண்டுக்கல் ரோடு, கரூர்–636 705.<br>கைபேசி : 94425 84025<br>தொலைபேசி : 04324 – 255265<br>மின்னஞ்சல் : karpvds@yahoo.in |
| கிருஷ்ணகிரி | மாவட்ட திட்ட மேலாளர்,<br>எண்.1, 158, MIG முதல் தளம்.புது TNHB கிருஷ்ணகிரி,<br>கைபேசி : 94880 31164<br>தொலைபேசி : 04343 – 225331<br>மின்னஞ்சல் : kgipvds@yahoo.in |
| மதுரை | மாவட்ட திட்ட மேலாளர்,<br>183/D/1A/1, திருமுருகன் காலனி, திருநகர்,<br>மதுரை–600 006. கைபேசி : 96003 80018<br>தொலைபேசி : 0452 – 2487117<br>மின்னஞ்சல் : mdupvds@yahoo.in |
| நாகப்பட்டினம் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>1298, பப்ளிக் ஆபிஸ் ரோடு,<br>ராஜா கல்யாண மண்டபம் பின்புறம்,<br>கடம்பாடி, நாகப்பட்டினம்–611 003<br>கைபேசி : 94425 84885<br>தொலைபேசி : 04365 – 248010<br>மின்னஞ்சல் : nagpvds@yahoo.in |

| | |
|---|---|
| நாமக்கல் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>5/243–3, PVK அவின்யூ,<br>(முத்துலஷ்மி மருத்துவமனை எதிரில்),<br>மோகனூர் ரோடு, நாமக்கல்–637 001.<br>கைபேசி : 73737 38101<br>தொலைபேசி : 04286 – 230622<br>மின்னஞ்சல் : nklpvds@yahoo.in |
| பெரம்பலூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>மாவட்டஆட்சியர் அலுவலகம்,<br>பெரம்பலூர்–621 212.<br>கைபேசி : 74026 10745<br>தொலைபேசி : 04328 – 225133<br>மின்னஞ்சல் : pmbpvds@yahoo.in |
| புதுக்கோட்டை | மாவட்ட திட்ட மேலாளர்,<br>835/1 அம்பாள்புரம், முதல் தெரு, பின்புறம்<br>புதுக்கோட்டை–622 001.<br>கைபேசி : 94866 12970<br>தொலைபேசி : 04322 – 230229<br>மின்னஞ்சல் : pdkpvds@yahoo.in |
| ராமநாதபுரம் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>237/2–421, வசந்தபுரம், மதுரை மெயின் ரோடு,<br>பரமக்குடி–623 707, ராமநாதபுரம் மாவட்டம்<br>கைபேசி : 94421 22123,<br>தொலைபேசி : 04564 – 225530<br>மின்னஞ்சல் : ramnadpvds@yahoo.in |
| சேலம் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>207/174, செல்வவிநாயகர் தெரு,<br>ராஜன் ஸ்டுடியோ பில்டிங், வாழப்பாடி, சேலம்–636 115.<br>கைபேசி : 94876 59877<br>தொலைபேசி : 04292 – 222211<br>மின்னஞ்சல் : salempvds@yahoo.in |
| சிவகங்கை | மாவட்ட திட்ட மேலாளர்,<br>47, கொல்லி ஹால் தெரு, மேலூர் ரோடு,<br>சிவகங்கை – 630 562<br>கைபேசி : 98474 52702<br>தொலைபேசி : 04575 – 243803<br>மின்னஞ்சல் : svgpvds@yahoo.in |

| | |
|---|---|
| தேனி | மாவட்ட திட்ட மேலாளர், 10, பழைய எண்.264,<br>டாக்டர் குமரன் இல்லம், TWAD அலுவலகம் எதிரில்,<br>GH ரோடு, தேனி–625 531<br>கைபேசி : 9487139353<br>தொலைபேசி : 04546 – 252283<br>மின்னஞ்சல் : thenipvds@yahoo.in |
| திருவள்ளூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>46, ஆவடி பைபாஸ் ரோடு,<br>பழைய மாவட்டஆட்சியர் அலுவலகம், திருவள்ளூர்.<br>கைபேசி : 99620 22250<br>தொலைபேசி : 27665252<br>மின்னஞ்சல் : tvallurpvds@yahoo.in |
| திருவாரூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>1–A, ரவிதுரை தெரு, அண்ணா சிலை அருகில்,<br>ஆண்டவர் திருமண மண்டபம்,<br>கைபேசி : 96885 55444<br>தொலைபேசி : 04366 – 244654<br>மின்னஞ்சல் : tvarurpvds@yahoo.in |
| திருநெல்வேலி | மாவட்ட திட்ட மேலாளர்,<br>765 E, NGO காலனி, ராஜபாளையம் மெயின் ரோடு,<br>சங்கரன் கோயில், திருநெல்வேலி மாவட்டம்–627 756<br>கைபேசி : 94895 23982<br>தொலைபேசி : 04636 – 223984<br>மின்னஞ்சல் : tvelipvds@yahoo.in |
| திருவண்ணாமலை | மாவட்ட திட்ட மேலாளர்,<br>521 A, அசேக் நகர், வேங்கைகல், சிவா ரெசிடென்சி,<br>திருவண்ணாமலை–606 601.<br>கைபேசி : 94880 31164<br>தொலைபேசி : 04175-224676 /228652<br>மின்னஞ்சல் : tvmalaipvds@yahoo.in |
| தூத்துக்குடி | மாவட்ட திட்ட மேலாளர், 58 C, ராமய்யா நகர்,<br>முதல் தெரு, மந்தி தோப்பு ரோடு,<br>கோவில்பட்டி–628 501, தூத்துக்குடி.<br>கைபேசி : 94864 90874<br>தொலைபேசி : 04632-220027<br>மின்னஞ்சல் : tutpvds@yahoo.in |

| | |
|---|---|
| வேலூர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>14 பாலாஜி நகர், முதல் தெருகாட்பாடி,<br>வேலூர்–632 006<br>கைபேசி : 99404 42559<br>தொலைபேசி : 0416-2242071 / 2249530<br>மின்னஞ்சல் : vlrpvds@yahoo.in |
| விழுப்புரம் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>15/1, பவானி தெரு, அலமேலுபுரம்,<br>திருக்கோவிலூர் மெயின் ரோடு, விழுப்புரம்–605 602.<br>கைபேசி : 94426 03312<br>தொலைபேசி : 04146-250357 / 222481<br>மின்னஞ்சல் : vpmpvds@yahoo.in |
| விருதுநகர் | மாவட்ட திட்ட மேலாளர்,<br>சுகாதார அலுவலக பில்டிங், கீழ்தளம்,<br>மாவட்டஆட்சியர் அலுவலகம், விருதுநகர்–626 002.<br>கைபேசி : 9445327750<br>தொலைபேசி : 04562 – 252627<br>மின்னஞ்சல் : vnrpvds@yahoo.in |

**விரிவாக்கம்**

| | |
|---|---|
| சு.உ.கு | சுய உதவிக்குழுக்கள் |
| கி.வ.ஒ.ச. | கிராம வறுமை ஒழிப்பு சங்கம் |
| ச.த.கு. | சமூக தணிக்கை குழு |
| ஊ.அ.கூ | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு |
| மகமை | மக்கள் கற்றல் மையம் |
| ஒ.தொ.கு | ஒத்த தொழிற் குழு |
| வா.கூ | வாழ்வாதார கூட்டமைப்பு |
| சு.நி | சுழல் நிதி |
| ஆ.நி | ஆதார நிதி |
| தாட்கோ | தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நல வாரியம் |
| ம.தி | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம் |
| ம.ஊ.வ.ம | மகமை ஊரக வளர்ச்சி மகமை |

# பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

## 28. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

### திட்டக் குறிக்கோள் மற்றும் நோக்கம்

நிலைத்த தன்மையுடன் கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி அவற்றை சீரிய முறையில் நிர்வகிக்கத் தக்க திறமையான தற்சார்பான கடலோர சமுதாயத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களால் குறிப்பாக பெண்களால் செயல்படுத்தப்படும் வாழ்வாதார தொழில்கள் மற்றும் வள ஆதார அமைப்புகள் நிலைத்து செயல்படுத்துவதை இத்திட்டம் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுகப்பட வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **1. கடலோர பகுதி வள ஆதார மேலாண்மை** | | | |
| சமுதாய உட்கட்டமைப்பு வசதி | மக்களின் பங்கேற்புடன் உட்கட்டமைப்பு வசதிகள் கண்டறியப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. | திட்டப் பகுதியிலுள்ள கிராம மக்கள் | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| மீன்வள ஆதார மேலாண்மை | மீன் வளத்தினை அதிகரிக்கும் பொருட்டு செயற்கை பவள உறைவிடங்களை உருவாக்குதல். | திட்டப் பகுதியில் கடலோர கிராமங்களில் மீன் பிடி படகுகள் மூலம் கடலில் மீன் பிடிப்பவர்கள் | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **2. ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் உபகரணங்கள்** | | | |
| நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி | திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 70 சதவீதம் தொகை நாபின்ஸ் நிறுவனநிதி, 25 சதவீதத் தொகை நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி மற்றும் 5 சதவீதத் தொகை பயனாளிகளின் பங்களிப்பு | கூட்டு பொறுப்புக் குழுக்களால் தொடங்கப்படும் புதிய தொழில் திட்டங்கள | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுகப்பட வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| காப்பீடு திட்டங்கள் (ஆயுள் மற்றும் பொருட்கள்) | குறைவான சந்தா தொகையில் ஆயுள் காப்பீடு மற்றும் பொருள் காப்பீடு | திட்டப் பகுதியில் குடியிருக்கும் அனைத்து தரப்பினர் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| பொருள் உருவாக்கம் மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி | சமையலறை கழிவுகளிலுருந்து எரிவாயு உற்பத்தி செய்யும் கலன் அமைத்தல். | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர் |
| **3. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி** | | | |
| மீன் விற்பனை சங்கங்கள் | திட்டப் பகுதியிலுள்ள கடலோர மீனவ கிராமங்களில் படகுகள் மூலம் மீன் பிடிக்க செல்லும் மீனவர்களை ஒருங்கிணைத்து சங்கங்களை ஏற்படுத்துதல். | மீன் பிடி படகுகள் மூலம் கடலில் மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள். | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |

| திட்டக் கூறு | விபரம் | பயனாளிகள் | அணுகப்பட வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| கடன் மீட்புத் தொகை | திட்டப் பகுதியில் கடலோர மீனவ கிராமங்களிலுள்ள மீனவ சங்கங்களில் இணைந்துள்ள மீனவர்களின் கடன் மீட்புத் தொகையை மீளக் கொடுத்து கடனிலிருந்து விடுவித்தல். | திட்டப் பகுதியில் கடலோர மீனவ கிராமங்களிலுள்ள மீனவ சங்கங்களில் இணைந்துள்ள மீனவர்கள். | மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |
| **சிறு தொழில் வளர்ச்சி** | | | |
| வேலை வாய்ப்பிற்கான தொழிற் பயிற்சி | திட்டப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து வேலை வாய்ப்பினை அளித்தல். | திட்டப் பகுதியிலுள்ள வேலையற்ற இளைஞர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்). | கிராம கூட்டு வள மேம்பாட்டு மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் |